A

COMPILATION

OF PAPERS IN THE TAMIL LANGUAGE.

INCLUDING SEVERAL ON PUBLIC BUSINESS,

TO WHICH IS ADDED

A GLOSSARY IN TAMIL AND ENGLISH

OF MANY WORDS USED CHIEFLY IN THE BUSINESS OF THE COURTS AND PUBLIC CUTCHERRIES.

EDITED BY

ANDREW ROBERTSON,

OF THE MADRAS CIVIL SERVICE.

ஒரு

பத்திரத்திரட்டு

தமிழ்ப்பாஷையில் அதிகாரதோரணைமாதிரிகையுட்பட, அரமனை அலுவல்களில் முக்கியமாய்வழங்குகிறபலமொழிகளுக்கு

ஒருஅகராதியும்சேர்க்கப்பட்டு, சென்னபட்டணத்துக்கிராணிஉத்தியோகஸ்தர்களில்,

ம. ரா. ரா. ஆன்றியு - ரோபர்ட்சன்

துரைஅவர்களாலேஅச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:

PRINTED BY R. W. THORPE,

AT THE VEPERY MISSION PRESS, OF THE SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE.

1839.

PREFACE.

The Editor was induced to undertake the compilation of the present work from his knowledge of the difficulty experienced by many of the Junior Civil Servants attached to the College of Fort St. George in procuring papers in the Tamil language of an approved style, and of such various degrees of difficulty as might lead them gradually to read with ease works abounding in words of the high dialect, and in sentences of intricate construction. The only interest which he has in its publication is the hope that it may prove of service to those for whose assistance in studying Tamil it is intended.

He is glad to have an opportunity of expressing his acknowledgments for aid in the progress of the work to Tiru Vencatachella Moodeliar, who has been attached to the College as a Moonshee for twenty five years, and whose learning, intelligence, and independence of thought have, during an acquaintance of many years, secured for him much deserved regard.

முதற்பிறிவு.[1]

நாலுக்கதைகள.

முதலாவதுகதை.

ஒரு ராசாவானவன் தன் மந்திரியை பார்த்து, இந்த உலகத்திலே நல்லவர்களாய் இருக்கிறவர்களுக்கு, எந்த குணம் இருக்க வேணும் என்று கேட்டான். அதற்கு அந்த மந்திரி, ஐயா, எல்லாத்திலும் முக்கியமான[2] குணங்கள் இரண்டு உண்டு, அந்த இரண்டு குணங்களும் நல்லவர்களுக்கு இருக்க வேணும்; அதுகள் என்ன என்றால பொய் சொல்லாமல் இருக்கிறதும, ஒருவருக்கும் துன்பம[3] செய்யாமல இருக்கிறதும என்றான். இதை கேட்ட அந்த ராசா, இந்த இரண்டு குணங்களும எதினால உண்டாகும என்று அந்த மந்திரியை கேட்க; மனசு பரிசுத்தமாய் இருந்தால் அதுகள உண்டாகும என்று அவன சொன்னான். அதற்கு அந்த ராசன், நீர் சொன்னதுகள சரிதான, எப்படி என்றால எல்லா தேசத்தார்களும, எல்லா சாதியார்களும, எல்லா மதஸ்தர்களும[4], எல்லா சாஸ்திரங்களாலும் இந்த குணங்களை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள, என்று சொல்லி, அந்த மந்திரிக்கு தகுந்த உபசாரத்தோடே வெகுமானம் செய்தான.

உவது. கதை.

இந்த லோகத்திலே முற்காலத்திலே மனுஷர்கள உண்டான போது, இந்த மனுஷர்களுக்கு ராசா இல்லை; ஆகையால பெரிய மீன்கள சின்ன மீன்களை சாப்பிடுகிறது போல, வலியவர்கள[1] எளியவர்களை[2] வருத்தினதினாலே[3], இந்த மனுஷர்களுக்கு எப்போதும் சந்தோஷம இல்லாமல் இருக்க; பிறகு புத்தியுள்ள சிலபேர்கள கூடி, நமக்கு ஒருவனை ராசாவாக நாம் வைத்துக்கொண்டு, அவன் சொன்னபடி நாம் நடந்தால, நமக்கு நன்மை உண்டாகும என்று தீர்மானித்து[4]; அப்படியே முதவிலே மனு என்றவனை ராசாவாக நியமித்துக்கொண்டார்கள[5]. அப்பால் அவர்கள் அந்த ராசா தங்களையும் தங்கள உடைமைகளையும[6] ரக்ஷித்த படியினாலே, தங்களுக்கு பூமியிலே வருகிற பலன்களில[7] ஆறில் ஒரு பங்கும், தங்களுடைய புண்ணியத்திலே பத்தில ஒரு பங்கும, அவனுக்கு கொடுப்போம் என்று நிச்சயித்து[8], அப்படியே அதுகளை அவனுக்கு கொடுத்துக்கொண்டுவந்தார்கள. அப்போது காட்டுப்பிரதேசங்களில[9] இருந்த மனுஷர்களும், தாங்கள சம்பாதித்த காய்களிலேயும பழங்களிலேயும் கிழங்குகளிலேயும ஆறில ஒரு பங்கு அவனுக்கு அப்படியே கொடுத்துக்கொண்டுவந்தார்கள. இந்தப்

[1] முதற்பிறிவு, முதல்பிறிவு. [2] முக்கியமான, பிரதானமான. [3] துன்பம, வருத்தம. [4] மதஸ்தன், சமையத்தான்.

[1] வலியவன், பலவான். [2] எளியவன், ஏழை. [3] வருத்துகிறது, தொசப்படுத்துகிறது. [4] தீர்மானிக்கிறது, தீர்த்துக்கொள்ளுகிறது. [5] நியமிக்கிறது, ஏற்படுத்துகிறது. [6] உடைமை, சொத்து. [7] பலன, பொழிவு. [8] நிச்சயிக்கிறது, உறுதிபண்ணுகிறது. [9] பிரதேசம, நிலம, இடம.

பிரகாரம[10] அந்த ராசா அனைவரிடத்திலும[11] ஆறில ஒரு கடமை[12] வாஙகிககொணடு, நியாயமாக துரைத்தனம பணணிககொணடுவநத படியினாலே, அந்த காலததில உள்ள மனுஷர்கள பயம இலலாமல் சநதோஷததோடே இருநதார்கள.

௫௰௩. கதை.

ஒருவன் ஒரு நிலததை இது என கிராமததின எலலையில[1] சேர்ந்தது எனறு சொலல, மறறொருவன் அதறகு விரோதமாக இநத பூமி என் ஊர் எலலைககு உட்படடிருககிறது எனறு சொலல, இபபடி அநத இருவரும ஒருவனோடு ஒருவன வழககாடிக்கொணடு, அநத ஊரின் ராசாவினிடததிலே அதை சொலலிக்கொணடார்கள. அநத ராசா அநத இருவரையும அநத வழக்கை பறறி விசாரிதத போது, அநத பூமி இன்ன கிராமததின எலலையிலே அகப்பட்டது எனறு தீர்ப்பு சொலலுதறகு ஒரு ருசுவும்[2] இலலாமையினால, அநத நிலம் அது வரைககும யார் வசததிலே இருநததோ அவனுடையதே எனறு தீர்ப்புசெயதான. மறறவன அநத ராசனை பார்த்து, மகா ராசாவே, ஒரு கிராமததின எலலை வழககிலே வாதி பிரதிவாதி இருவருககும் சாக்ஷி முதலானதுகள இலலாவிட்டால், அநத நிலததை சமானமாக[3] பஙகிட்டு அநத இருவருககும் கொடுக்க வேண்டியது எனறு தர்மசாஸ்திரம[4] இருககிறதே எனறான. அதற்கு அநத ராசா சபையில[5] இருககிற நிலம, ஒருவருககும அநுபோகம[6] இலலாத தரம்பு[7] ஆனால, நீ சொனன படியே செய்யப்படவேணடியது; இதுவோ அப்படிப்பட்டது அல்ல, ஒருவனுடைய அநுபோகத்தில் இருககிற சாகுபடிநிலம[8], ஆனபடியினாலே இபபோது நான் தீர்த்த தீர்ப்பினபடியே நடபபிக்கப்பட தக்கது, எனறு தர்மசாஸ்திரததிலே சொலலியிருககிறது எனறான.

௫௰௪. கதை.

ஒரு குருக்கள் ஒரு நாள் தமமுடைய ஒரு சிஷின வீட்டுககு வநதார். அநத சிஷின் அநத குருக்களை வணஙகி[1] கும்பிட்டு[2] அவருககு முனனே நினறான. அவர், சிஷா, உனனுடைய வர்த்தகததினாலே உனககு லாபம[3] உணடாயிருககிறதா எனறார். அவன் ஆம் சுவாமி எனககு அபபடிதான இருககிறது எனறான. அபபால் அவர் உன் பெண்சாதி நல்ல குணம உள்ளவளா எனறார். அதற்கு அவன உமமுடைய ஆசீர்வாதத்தினாலே[4] அவள் நலல குணம உள்ளவளாய்த்தான் இருககிறாள எனறான. அபபுறம அவர் உனககு பிளளைகள உணடா எனறார். அவன, ஐயா, இபபோது தான அடியேனுககு ஒரு ஆண்பிளளை பிறநதிருககிறது எனறான. அபபோது அநத குருக்கள் உனககு பெண்பிளளை பிறவாமல, ஆண்பிளளை பிறநதது எனககு மிகவும் சநதோஷமாய் இருககிறது; அநத பிளளைககு அஞ்சு வயசு[5] ஆகும் மட்டும அதை ஒரு ராசாவை போல நீ நினைதது, அதற்கு உபசாரம்[6] செய்; அநத பிளளைககு நீ படிபபிககும் காலததிலே, உனனை அவன ஒரு சததுருவை போல நினைககட்டும்; அவன் நன்றாய் படிதது அவனுககு நலல புததி வநத பின்பு, நீ அவனுககு ஒரு சினேகிதனை போல இரு; எனறு அநத வர்த்தகனுககு உபதேசிததுபபோட்டு[7] தம்முடைய சொஸ்தானததுககு[8] போனார்.

10 பிரகாரம், படி, தன்மை. 11 அனைவர், எலலார். 12 கடமை, இறை, வரி.

1 எலலை, அநதம. 2 ருசு, சாக்ஷி. 3 சமானமாக, சரியாக. 4 தர்மசாஸ்திரம, நீதிசாஸ்திரம. 5 சபை, ஆலோசனை, சநதேகம. 6 அநுபோகம, உபயோகம. 7 தரம்பு, பாழ்நிலம. 8 சாகுபடிநிலம, பயிரிடுகிறநிலம.

1 வணஙகுகிறது, தெணடனிடுகிறது. 2 கும்பிடுகிறது, கைகூப்புகிறது. 3 லாபம, ஆதாயம. 4 ஆசீர்வாதம, வாழ்த்து. 5 வயசு, பிராயம. 6 உபசாரம, மரியாதை. 7 உபதேசிககிறது, போதிககிறது. 8 சொஸ்தானம், சொநத இடம்.

௫வது. கதை.

மிகுந்த பணக்காரன் ஒருவன் இறந்துபோன பின்பு, அவன் குமாரர்கள்[1] இருவரும் அவன் வைத்திருந்த பணத்தைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ள நினைத்தார்கள். அப்போது அந்த மூத்தவன், தங்கள் பிதாவின் ஆஸ்தியைச் சமானமாகப் பங்கிடக் கூடாது, நான் மூத்தவன் ஆகையால் எனக்கு அதிக பங்கு வர வேணும் என்று, தன் தம்பியுடனே சச்சரவுபட்டு[2]; அதினாலே அந்த இருவரும் அந்தப் பட்டணத்து நியாயாதிபதி[3] அண்டையிலே போய் முறையிட்டுக்கொண்டார்கள்[4]. அவன் நீங்கள் இரண்டு பிள்ளைகளும் கொஞ்சமும் வித்தியாசம் இல்லாமல், உங்கள் பிதாவின் சொத்துக்களை[5] சம்பாகம்[6] பண்ணிக்கொள்ள வேண்டியது என்றான். அப்போது அந்த மூத்தவன், அய்யா, ஒரு தகப்பன் தான் சம்பாதித்த பொருள்களிலே, தன் மூத்த பிள்ளைக்கு ஒரு பெரிய பங்கு கொடுக்க வேணும் என்று, மனு என்றவர் தம்முடைய தர்மசாஸ்திரத்திலே சொல்லியிருக்க; நீர் அதுக்கு மாறுபாடாகச் சொல்லலாமா என்றான். அதற்கு அந்த நீதிக்காரன், அவனைப் பார்த்து, முற்காலத்திலே பிராமணர் முதலானவர்களுக்கு உண்டாயிருந்த, மாங்கிசம்[7] தின்கிறது முதலான அனேக நடத்தைகள், இக்காலத்திலே செய்யக் கூடாது என்று, எப்படித் தள்ளப்பட்டிருக்கிறதுகளோ, அப்படியே நீ சொல்லுகிறபடி முற்காலத்திலே நடந்துவந்த இந்த நிபந்தனையும்[8] இக்காலத்திலே தள்ளப்பட்டது, என்று அவனுக்குத் தெரியச் சொல்லி அனுப்பினான்.

௬வது. கதை.

முன் காலத்திலே மேற்கு தேசத்திலே ஏழையாய் இருந்த ஒரு குடித்தனக்காரனுடைய பிள்ளை, தன் சாதி வழக்கப்படி ஆடு மாடுகளை ஒரு காட்டிலே மேய்த்துக்கொண்டிருந்தான். அதிலே எந்த பாக்கியவானாலேயோ பூர்வ காலத்திலே வைக்கப்பட்ட ஒரு பெரிய புதையல்[1], இவனுடைய பதினெட்டாம் வயசிலே இவனுக்கு அகப்பட்டது. அது நிறைய விலையுயர்ந்த அளவற்ற[2] ரத்தினங்களும், மிதமில்லாத[3] மாற்று[4] உயர்ந்த பொன்னும் வெள்ளியும், நேர்ந்த[5] ஆபரணங்களும்[6] பல வகை நாணயங்களும்[7] இருந்ததுகள். இவன் புத்திசாலியாய் இருந்த படியினாலே, அப்பேர்ப்பட்ட புதையலைக் குறித்து ஒருவருடனும் சொல்லாமல், அங்கேயே அதை மறைத்து வைத்துக்கொண்டு, தான் படிப்பு முதலான நல்ல காரியங்களை வழக்கம் பண்ணிக்கொண்டிருந்தான். இவன் அப்படி இருந்த போது, அந்த தேசத்து துரைத்தனம் ஒழுங்கு[8] இல்லாமலும் பலம் குறைந்தும் இருந்தது. அந்த சமயத்திலே இவன் வைத்திருந்த திரவியங்களைச் செலவுபண்ணி, தனக்கென்று குதிரைகள் யானைகள் பதாதிகள்[9] முதலானதுகளையும் ஆயுதங்களையும் சேகரித்துக் கொண்டுவந்து, அந்த ராசாவின் பட்டணத்தைச் சில நாள் முற்றிகை போட்டுக்கொண்டு, அவனோடே யுத்தம் செய்து, அதற்கு மேலே அந்த அலங்கம்[10] ஏறி, அவன் பட்டணத்துக்குள்ளே பிரவேசித்து[11], அவனையும் செயித்து, அவன் கோட்டையையும் கொள்ளையிட்டு, அவன் துரைத்தனத்தையும் பிடுங்கிக்கொண்டு, சில வருஷங்களுக்குள்ளே படிப்படியாய் ஒரு பெரிய ராசா ஆனான். இவனை ராயர்களுடைய துரைத்தனத்துக்கு முதல் புருஷன் என்று சொல்லுகிறார்கள்.

[1] குமாரன், புத்திரன். [2] சச்சரவு, சண்டை. [3] நியாயாதிபதி, நீதிக்காரன். [4] முறையிடுகிறது, பிராதுபண்ணுகிறது. [5] சொத்து, உடைமை. [6] சம்பாகம், சரிபங்கு. [7] மாங்கிசம், இறைச்சி. [8] நிபந்தனை, சட்டம்.

[1] புதையல், புதைத்தபொக்கசம். [2] அளவற்ற, எண்ணிக்கையில்லாத. [3] மிதமில்லாத, அதிகமான. [4] மாற்று, வர்ணம். [5] நேர்ந்த, செலவுள்ள. [6] ஆபரணம், நகை. [7] நாணயம், காசுபணமுதலானதுகள். [8] ஒழுங்கு, கிரமம். [9] பதாதி, காலாள். [10] அலங்கம், கோட்டைமதில். [11] பிரவேசிக்கிறது, நுழைகிறது.

௭வது. கதை.

ஒரு ராசனானவன் அனேக நாய்களையும் பல வேட்டைக்காரர்களையும் கூட்டிக்கொண்டு, ஒரு காட்டுக்கு போய் அங்கே வேட்டையாடிக்கொண்டிருந்தான். அப்போதில் ஒரு பெரியவர் அவனிடத்தில் அவனண்டை வந்து, ராசாவே, மிருகங்களை கொல்லுகிறது பாவமான செய்கை அல்லவோ என்றார். அதற்கு அந்த ராசா துஷ்ட மிருகங்களையும், தின்னப்பட தக்கதுகளையும் கொல்லுகிறது ராசாக்களுக்கு தருமந்தான் என்று சொன்னான். அப்படி அந்த இருவரும் பேசிக்கொண்டிருக்கையிலே, ஒரு பாம்பானது ஒரு புற்றிலிருந்து வெளிப்பட்டு, நாங்கள் பிரமதேவன் கட்டளையின்[1] படி உயிர்களுக்கு தீங்கு பண்ணுகிறோமே அல்லாமல், நாங்களாய் தீங்கு[2] பண்ணுகிறது இல்லை என்று சொல்லிச்சு. அப்போது ஒரு புதரிலிருந்து[3] ஒரு முசல் புறப்பட்டு, ஓ ராசாவே, எங்கள் பெண்டு பிள்ளைகள் அழும்படி எங்களை நீங்கள் கொன்று தின்கிறதினாலே உங்களுக்கு பாவமே வரும், உங்களுக்கு உண்ணுகிறதற்கு நெல்லு கேழ்வரகு முதலான தானியங்களும், கத்தரிக்காய் முதலான காய்க்கறிகளும், உங்களுக்கு வேண்டிய மட்டும் இருக்க, நீங்கள் எங்களை பதைக்கப்பதைக்க[4] வதைக்கிறது[5] தருமம் அல்ல என்று சொல்லிச்சு. அந்த பெரியவர், இதுகள் சொன்னதுகளை கேட்டீரோ, ராசாவே, என்று அவனை கேட்க; அதற்கு அவன் இதுகள் உம்முடைய மகிமையினாலே[6] இப்படி சொல்லினதுகள் என்று சொல்லி, அவரை வணங்கி, அப்பொழுதே அக்காட்டிலே வேட்டையாடுகிறதை நிறுத்திப்போட்டு, அதின் பிற்பாடும் தன் ஆயுசு[7], உள்ள மட்டும், என்றென்றைக்கும்[8] தான் இனிமேல் வேட்டையாடுவது இல்லை என்று சபதம்[9] பண்ணிக்கொண்டு தன் பட்டணத்துக்கு போனான்.

௮வது. கதை.

ஒரு ராசாவினிடத்திற்கு ஒரு பெரியவர் வந்தார். அந்த ராசா சிலகாலம் அவரை தன்னிடத்திலே வைத்துக்கொண்டு உபசரித்தான்[1]. அப்போது அவர் பால் சாப்பிடுகிறதற்காக ஒரு பசுவும் கன்றும் அந்த ராசா அவருக்கு கொடுத்திருந்தான். சில மாசங்களுக்கு பின்பு அந்த ராசா அந்த பெரியவர் இடத்துக்கு வந்து, அவரோடே பேசிக்கொண்டிருந்தபோது, அவரை பார்த்து, மிகவும் வணக்கத்தோடே, அடியேனுக்கு இந்த ராச்சியபாரத்தை தாங்குதல் மிகவும் வருத்தமாய் இருக்கிறது; இது சொற்பமாக[2] தோன்றும்படி தேவரீர் அடியேனுக்கு ஒரு உபாயம் தயவு செய்து சொல்ல வேணும் என்று பிரார்த்தித்தான்[3]. அப்போது அவர் அந்த ராசா தமக்கு முன்னமே கொடுத்த அங்கே கட்டி நின்ற பசுவையும் அதின் கன்றையும், அவனுக்கு சுட்டிக்காட்டி[4], நீ உன் கீழே இருக்கிற ராச்சியத்தை இந்த பசுவை போல பாவித்துக்கொண்டு[5], இதின் கன்று போல உன்னை பாவித்துக்கொண்டு, இந்த ராச்சிய சனங்களுக்கு பிரியம்[6] உள்ளவன் ஆகி இருந்தால், உனக்கு சத்துரு செயமும் சன பரிபாலனமும்[7] திரவிய லாபமும் வருத்தம் இல்லாமல் உண்டாகும் என்று சொன்னார். அதை அந்த ராசா விசுவாசத்தோடு கேட்டு, நாள் தோறும் அந்த திஷ்டாந்தத்தை[8] ஆலோசித்துக்கொண்டு, அந்த ராச்சியத்தில் உள்ள மனுஷர்களுக்கு எல்லாம் பிரியம் உள்ளவன் ஆகவே நடந்துவந்தான். அதனாலே அவன் இந்த உலகத்திலே நல்ல புகழையும்[9] அடைந்து, தன் ஆயுசு பரியந்தம் செவ்வையாய் தன் அரசு செல்ல மேலான சுகத்தையும் அடைந்திருந்தான்.

1 கட்டளை, விதி. 2 தீங்கு, பொல்லாங்கு. 3 புதர், தூறு. 4 பதைக்கப்பதைக்க, துடிக்கத்துடிக்க. 5 வதைக்கிறது, கொல்லுகிறது. 6 மகிமை, மகத்துவம். 7 ஆயுசு, வாணாள். 8 என்றென்றைக்கும், எப்போதைக்கும். 9 சபதம், பிரதிக்கினை.

1 உபசரிக்கிறது, போஷிக்கிறது. 2 சொற்பம், அற்பம். 3 பிரார்த்திக்கிறது, வேண்டுகிறது. 4 சுட்டிக்காட்டுகிறது, குறித்துக்காண்பிக்கிறது. 5 பாவிக்கிறது, பாலிக்கிறது. 6 பிரியம், அன்பு. 7 பரிபாலனம், ரக்ஷணம். 8 திஷ்டாந்தம், உவமை. 9 புகழ், கீர்த்தி.

௩வது. கதை.

ஒரு தேசத்தில் ஒரு எளியவனுடைய நிலததை, ஒரு பாககியவான ஒரு கார்ணமும்[1] இலலாமல் இருபது வருஷம அனுபோகிததுக்கொணடிருநதான்[2]. பினபு வழக்குகளை நனருக விசாரிககிற குணமுளள ஒரு நியாயாதிபதி அநத தேசததிற்கு வநத படியினலே, அநத எளியவன் அநத நியாயாதிபதியின் இடததுக்கு போய், அநத மகா்ாசன் தனனை செய்த அநீதத்தை குறிதது முறையிடடான[3]. அநத நியாயாதிபதி அநத பிர்திவாதியை[4] சட்ட[5] படிககு அழைபபிதது, நீ என் இநத வாதியினுடைய[6] நிலததை பிடுஙகிககொணடாய் எனறான. அநத பிர்திவாதி, ஐயா, அது என் நிலம; நான் அதை இநத வாதியின் கண் முனனே இருபது வருஷமாய் அனுபோகிததுக்கொணடிருக்கிறேன; அது இவனுடைய நிலமாய் இருநதால, இது வரைககும அதை பறறி இவன நீதியிலே போய் முறையிடடுககொளள மாட்டானே எனறான. பிறபாடு அநத நீதிக்கார்ன், அநத வாதியை பார்த்து, அது உனனுடைய நிலம எனறு நீ சொலலுகிறையே, அதற்கு எனன திஷ்டாநதம்[7] நீ சொலலுகிறாய் எனறான். அநத வாதி, ஐயா, நான அதை விலைககு வாஙகினேன, அதற்கு நிலவிககிர்யச்சீட்டு[8] என் அண்டை இருககிறது எனறு, அதை அநத நீதிக்கார்னுககு காண்பிததான. அபபால அநத பிர்திவாதியை அநத நியாயாதிபதி பார்த்து, அது உன் பூமி எனகிறதற்கு நீ எனன அததாட்சி[9] கொடுககிறாய் எனறான. அநத பிர்திவாதி, ஐயா, இருபது வருஷமாய் அது எனககு அனுபோகம ஆய்க்கொணடிருககிறதே, அதுவே தவிர் வேறே எனககு அததாட்சி இலலை எனறான. அபபுறம அநத நியாயாதிபதி அநத பிர்திவாதியை பார்த்து, அனுபோகததை காடடிலும கிர்யச்சீட்டு[10] மிகவும பலம ஆனபடியினலே, நீ இநத வாதிககு அநத பூமியை கொடுததுவிடு; இநத வாதி இது வரைககும இதை குறிதது முறையிடடுககொளளாமல இருநத தபபிதத்துககாக, அநத பூமியிலே இது வரைககும உனககு கிடைததிருநத லாபஙகளை, நீ அவனுககு கொடுகக வேணடியது இலலை எனறு தீர்ப்பு பணணினன.

௪வது. கதை.

ஒரு ர்ாசா மிருக்ஙகளாலே தனககும தனனுடைய தேசத்து குடிகளுககும் உணடாயிருநத நஷ்டததை[1] கேள்விப்படடு, அதை விலககும[2] பொருடடு, தான் வேடடைககு போக வேணும் எனறு யோசனை பணணிககொணடு, அநத வேடடைககு வேணடிய மனிதர்களோடே கூட ஒரு காடடுககு போய், அஙகே சில நாள் வேடடையாடிககொணடிருநதான. ஒரு நாள் அநத ர்ாசா ஒரு குதிரையின மேல ஏறிககொணடு, தனனுடைய சில மனுஷர்களோடே கூட அஙகே இருநத ஒரு நதியின[3] சமீபததிலே[4] போனன்; அஙகே ஒரு பிர்ாமணன, தன கணகளை மூடிககொணடு, தியானம்[5] பணணிககொணடிருந்ததை அவன பார்தது, அவன அணடையில் போனன். அநத பிர்ாமணன தன கணகளை திறவாமல வெகு நேர்ம அநத தியானததிலேயே இருநதுவிடட படியினலே, அநத பிர்ாமணனுககு அநத ர்ாசா தன அண்டை வநத உடனே, அவனுககு எவவித மரியாதையும செயய கூடாமல இருநதது. அநத ர்ாசா அவனுடைய தியானததை குறிதது, அவனை பரிசோதிகக[6] வேணும எனறு நினைதது, அவன தனகணகளை திறககிற வரைககும அஙகேயே காததிருநதான். பினபு அநத பிர்ாம

[1] கார்ணம, ஏது, நிமித்தம. [2] அனுபோகிககிறது, ஆணடுகொளளுகிறது. [3] முறையிடுகிறது, பிர்தபணணுகிறது. [4] பிர்திவாதி, எதிர்வாதி. [5] சட்டம, தர்மசாஸ்திர்ம. [6] வாதி, தொடர்வாதி. [7] திஷ்டாநதம, உதார்ணம, சாட்சி. [8] விககிர்யச்சீட்டு, கிர்யசாதனம. [9] அததாட்சி, சாட்சி, சாதனம, ஆதர்வு. [10] கிர்யச்சீட்டு, விறபனைச்சீட்டு.

[1] நஷ்டம, சேதம். [2] விலககுகிறது, நீககுகிறது. [3] நதி, ஆறு. [4] சமீபம, அருகு. [5] தியானம, யோகம. [6] பரிசோதிககிறது, பரிக்ஷிககிறது.

ணன் தன் கண்களை மிழித்த உடனே, அந்த ராசா அவனை பார்த்து, அய்யா, நான் உம்மிடத்திற்கு வந்து அஞ்சு நாழிகை ஆச்சுது என்றான். அவன், ராசாவே, என் மனசு இந்த உலகத்தின் காரியங்களிலே நில்லாமல், சுவாமியின் இடத்திலே நின்றது; ஆனபடியினாலே நீர் என் அண்டை வந்ததை நான் பார்த்தது இல்லை என்றான். அந்த ராசா, அய்யாவே, இப்போது நீர் ஒரு நாழிகை மாத்திரம் முன் போல சுவாமியை தியானம் பண்ணிக்கொண்டிருப்பீராகில், என்னுடைய இந்த குதிரையையும் என் ஆபரணங்களையும் உமக்கு வெகுமானமாக தருவேன் என்றான். அப்படியே செய்ய உடன்பட்ட[7] அந்த பிராமணன், மறுபடியும் தன் கண்களை மூடிக்கொண்டு, சில நிமிஷங்கள் மாத்திரம் தியானம் பண்ணி, அப்பால் தன் கண்களை திறந்து, அந்த ராசாவை பார்த்து, நீர் உம்முடைய குதிரையின் மேலே இருக்கிற சாமான்களையும்[8] அதோடே கூட எனக்கு கொடுப்பீரா என்றான். அதற்கு அந்த ராசா, ஆம், அப்படியே என் அபிப்பிராயம்[9] என்றான். அப்பால் அந்த பிராமணன் சற்றே தன் கண்களை மூடிக்கொண்டிருந்து, திரும்ப மிழித்து, அய்யா, ராசாவே, நீர் எனக்கு உம்முடைய ஆபரணத்தின் பெட்டியை கூட கொடுப்பீரா என்றான். இந்தப்படிக்கு அந்த பிராமணன் அந்த ஆசைபதம்[10] கேட்ட பிறபாடு, அவனுக்கு தியானம் பிடிபடாமல்[11] அடிக்கடி தன் கண்களை விழித்து விழித்து, இன்னம் இன்னம், தனக்கு வேண்டியதுகள் எல்லாம் அந்த ராசாவை கேட்டதினாலே, இது மோசமான தியானம் என்று, அந்த ராசா நினைத்துக்கொண்டு, அப்புறம் அவனோடு ஒன்றும் பேசாமல் தன் பாட்டுக்கு போய்விட்டான்.

௰௪. கதை.

டில்லி என்கிற பெரிய பட்டணத்தில் ஒரு காலத்திலே இருந்த ஒரு பெரிய ராசாவானவன், தன் அண்டையில் இருந்த ஒரு யோக்கியனான துலுக்கன் வசத்தில்[1], ஒரு பெருந்தொகையுள்ள[2] திரவியங்களும், சில ரத்தினங்களும், வஸ்திரங்களும், வாகனங்களும் கொடுத்து, மக்கா என்கிற தேசத்தில் இருக்கிற தங்களுடைய பெரிய கோயிலிலே, தர்மத்திற்காக தன்னுடைய பேராலே அதுகளை செலுத்திவிட்டு[3], அந்த கோயில் அதிகாரியின்[4] இடத்திலிருந்து, அதற்காக செலுத்துச்சீட்டு[5] வாங்கிக்கொண்டு வரும்படியாய் அவனுக்கு உத்தரவு பண்ணி அனுப்பினான். அந்த துலுக்கன் அப்படியே அதுகளை எல்லாம் அவ்விடத்துக்கு கொண்டுபோன போது, இரான் தேசத்து ராசா முதலானவர்களும், அந்த கோயிலுக்கு காணிக்கையாக[6] பணம் முதலான பொருள்களை அனுப்பினார்கள். அவர்கள் அவ்விடத்துக்கு அனுப்பின பொருள்கள் எல்லாம், டில்லி ராசா அனுப்பின பொருள்களை காட்டிலும் அதிகமாய் இருந்ததுகள் என்று அந்த துலுக்கன் கண்டான்; ஆனபடியினாலே அவன் தான் கொண்டுவந்த பொருள்களை அந்த கோயிலிலே செலுத்தினால், அதினாலே தன்னுடைய எசமானுக்கு கீர்த்தி குறைவாகும் என்று நினைத்து, தன் வசத்தில் இருந்த அந்த பொருள்களை அந்த கோயிலுக்கு அப்போது செலுத்தாமல், அங்கேயே தான் இருந்துகொண்டு, அந்த திரவியங்களைக்கொண்டு சிறிது காலம் வரைக்கும் லாபமுள்ள ஒரு நல்ல வர்த்தகம் பண்ணி, அதினாலே அந்த பணங்களை மிகவும் பெருக்கினான்[7]; பின்பு தான் கொண்டுவந்த பணம் முதலான சகல பொருள்களையும், தன்னுடைய ராசாவின் பேராலே அந்த கோயிலுக்கு செலுத்தி, வழக்கப்படிக்கு அந்த அதிகாரியின் இடத்தில் பற்றுச்சீட்டு[8] வாங்கி

[7] உடன்படுகிறது, சம்மதிக்கிறது. [8] சாமான், முஸ்தீது. [9] அபிப்பிராயம், தாற்பரியம். [10] ஆசைபதம், ஆசைவார்த்தை. [11] பிடிபடுகிறது, நிலைகொள்ளுகிறது.

[1] வசம், பாரிசம். [2] தொகை, மொத்தம். [3] செலுத்துகிறது, கட்டுகிறது. [4] அதிகாரி, விசாரணைக்காரன். [5] செலுத்துச்சீட்டு, ரசீது. [6] காணிக்கை, வெகுமானம். [7] பெருக்குகிறது, வளர்த்துகிறது. [8] பற்றுச்சீட்டு, ரசீது.

கொணடு, திருமபி டில்லிககு வநது, தன எசமானுடைய சமுகததில[9] அநத பறறுசசீடடை ஒபபித தான. டிலலி ராசா தன இடததில அவனுககு இருநத விசுவாசததையும[10] அவன புததியையும் குறிதது அவனுககு மிகவும வெகுமானஙகள செயததும் அலலாமல, அவன இடததிலே தனககு உணடான நமபிககையினுலே[11] அவனுககு தனனுடைய பொககசததிறகு[12] தலைவனுன உததியோககமும கொடுதது அவனை மகிமையும்[13] படுததினுன்.

௰௨-வது. கதை.

இநத தேசததிலே ஒரு பெரிய ராசாவானவன முறகாலததிலே துரைததனம செயதுகொணடிருநத போது, அவனுடனே ஒரு சததுரு ராசா வநது சணடைசெயதான; அநத பெரிய ராசாவினுடைய மநதிரியின மகனுகிய அவன சேனுபதியானவன ரகசியமாய்[1] சில சகாயஙகளை[2] அநத எதிரிககு[3] செயதான. ஆனுலும அநத பெரிய ராசா அநத பகைபாளியை செயிதது, அவனை பிடிதது, தன காவலிலே வைததுபபோடடான; பினபு அவன தன சேனுபதி தனககு அநதரஙகததிலே செயத மோசததை அறிநதிருநதும, அதை வெளிப்படுத்தாமல தன மனசிலேயே வைததுககொணடிருநது, ஒரு நாள தன சமுகததிலே, தனது பெரிய மநதிரியின முகதாவிலே[4] அவன குமாரனுகிய தனது சேனுபதியை அழைபபிதது, உமமுடைய் தகபபனுருககு எழுபது வயது ஆசசுது, அவர் மெதத வார்த்திகர்[5] ஆய்விடடார்; ஆகையால அநத மநதிரித்தனததை இபபோது உமககு கொடுததேன எனறு சொலலி, அனேக வஸ்துககளையும அவனுககு வெகுமானஙகளாக கொடுதது, உடனே அநத ராசா அநத புது மநதிரியை பார்தது, நாம் இரணடு பேரும இபபோது சறறுநேரம தனிதது யோசனை செயய வேணடியிருககிறது, நீர் மாததிரம இஙகே இரும் எனறு சொலலி, மறற மனுஷர்கள எலலாரையும தஙகள பாடடுககு போக சொலலி உததரவு கொடுதது அனுபபிவிடடான; அபபுறம அநத புது மநதிரியுடனே தனியாய் சில நேரம சில நாடோடி[6] காரியஙகளை குறிதது பேசிககொணடிருநது, கடைசியிலே தன எசமானுககு துரோகம[7] செயத ஒருவனுககு தெணடனை[8] எனன செயய் தககது எனறு அவனை கேடடான. அதற்கு அவன அபபடிபபடடவனை கொலையாலே[9] தானே பிராயச்சிததம[10] பணண வேணுமஎனறு உததரவு கொடுததான. அபபால அநத ராசா அவனை பார்தது, நீ அபபடிபபடடவன தானே எனறு, அவன ஒததுககொளளும படியாய் அவனுககு சில திஷ்டாநதஙகளை சொல்லிக்காட்டி, அதினுலே உனனை நான் கொலலுவேன எனறு, உடனே தன கத்தியை உருவிககொணடு[11] அவன தலையை வெடடி எறிநதுவிடடான.

௰௩-வது. கதை.

ஒரு துரை ஒரு பெடடை நாயை மிகவும புததியுளளதாய் கணட படியினுலே அதின் குடடிகளும[1] அதுபோலவே புததியுளளதுகளாய் இருககும எனறு நினைதது, ஆயிரம ரூபாய்க்கு அதின குடடிகளிலே ஒனறை விலைககு[2] வாஙகினுர்; பினபு அதை ஒரு நாய் எனறு நினையாமல, தமககு அது ஒரு பிளளை எனறு நினைதது, அதை நனறாய் போஷிததுக்கொண்டுவநதார்[3]. அது புததியுடனே விளையாடினதினுலும, அது பெரியது ஆன பிறகு நனறாய் வேடடை பிடித்ததினுலும, தன எசமான[4]

9 சமுகம, சநநிதானம. 10 விசுவாசம, அனபு. 11 நமபிககை, விசுவாசம. 12 பொககசம, கசானு. 13 மகிமை, கனம்.

1 ரகசியம, அநதரஙகம. 2 சகாயம, உதவி. 3 எதிரி, பகையாளி. 4 முகதாவிலே, முகததுககுமுனனே. 5 வார்த்திகன, கிழவன. 6 நாடோடி, சாதாரணமான. 7 துரோகம, மோசம. 8 தெணடனை, ஆககினை. 9 கொலை, கொலலுகை. 10 பிராயச்சிததம, தெணடனை. 11 உருவுகிறது, உறைகழிககிறது.

1 குடடி, சிறிசு. 2 விலை, கிரயம. 3 போஷிககிறது, உபசரிககிறது. 4 எசமான், துரை.

இடத்திலே அது விசுவாசமாய் இருந்ததினாலும், அந்த துரைக்கு அது மிகவும் சந்தோஷத்தை உண்டாக்கிக்கொண்டே வந்தது. அது அப்படி இருக்கையில், ஒரு நாள் அந்த துரை சல சமர்த்தியாய்[5] இருந்த ஒரு ஏரிக்கு போய் குளித்த போது, அங்கே அவருக்கு கொஞ்சம் கால் தவறி[6] அதின் ஆழத்திலே[7] விழுந்துபோனார். அவருக்கு நன்றாய் நீஞ்ச[8] தெரியாமையினாலே அவர் செத்துப்போகத்திருந்தார். அந்த வேளையில அவரோடே கூட அந்த நாய் போயிருந்த படியால, அது தன்னுடைய துரை தண்ணீரிலே முழுகி[9] செத்துப்போகாமல ஒரு உபாயம்[10] பண்ணினது, என்ன என்றால அந்த ஏரிக்கரைமேலே, தெய்வாதீனமாய்[11] கிடந்த ஒரு மிதவை[12]-மரத்துண்டை[13] உடனே அது தன வாயிலே கவ்விக்கொண்டு[14] அந்த தண்ணீரிலே விழுந்து, நீஞ்சி, அதை இழுத்துக்கொண்டு[15] தன எசமான அண்டையில போச்சு. அவர் இரண்டு ஒருதரம அந்த நீரிலே அமிழ்ந்தி[16] கிளம்பினவர்[17] இதை பார்த்து சிக்கிரத்திலே தமது கைகளை நீட்டி[18] அது கவ்வி கொண்டுவந்த மிதவையை பற்றிக்கொண்டு[19] அதின் ஆதரவினாலே[20] உடனே அந்த கரையிலே சுகமாய் வந்துசேர்ந்தார். ஆகையினாலே அந்த துரை பிறகு தம்முடைய பணத்திலே அப்படிப்பட்ட நல்ல நாய்களுக்கு பின்னும் சில செலவு பண்ணிக்கொண்டிருந்தார்.

௰௪வது. கதை.

ஒரு ராசாவுக்கு நாலு பிள்ளைகள; அவர்களை அந்த ராசாவானவன நன்றாய் படிப்பித்து, ஆயுத வித்தைகளையும அவர்களுக்கு கற்பித்து, சண்டைபண்ணுகிற உபாயங்களையும் அவர்களுக்கு சொல்லுவித்து, அவர்களை எல்லாம சமர்த்தர்கள[1] ஆக்கிவைத்தான; இப்படி செய்திருந்தும் அவனுடைய அதிகாரத்தை அவர்களுக்கு கொடாமல இருந்தான. அப்போது அந்த பிள்ளைகள எல்லாரும கூடி, நமக்கு அதிகாரம ஒன்றும நம்முடைய பிதாவாய்[2] இருக்கிறவர் கொடுக்க இல்லையே, அது என்ன என்று அவரை கேட்போமா என்று ஆலோசித்தார்கள. அவர்களிலே மூத்த பிள்ளையானவன, அதை குறித்து நம்முடைய தகப்பனாரை நாம கேட்க வேண்டியது என்ன; அவர் இடத்திலே காரியக்காரனாய்[3] இருக்கிற மந்திரியை நம்முடைய வசமபண்ணிக்கொண்டு, இந்த ராச்சியத்தை[4] நாமே அதிகாரம பண்ணலாம என்று சொன்னான. இரண்டாவது பிள்ளை அந்த மந்திரியானவன இதற்கு சம்மதியாமல நம்ம ராசாவுடனே இந்த சேதியை சொன்னானே ஆனால, நம்மை பொல்லாதவர்கள என்று ராசா நினைப்பார் என்றான. மூன்றாவான நாம சமர்த்தர் ஆனால ராசாவை காவலசெய்து, இந்த தேசத்தை ஆண்டுகொள்ளலாம என்று சொன்னான. நாலாவான நாம் இப்போது ஆலோசனைபண்ணினது எல்லாம், நம்ம ராசா கேட்டாரே ஆனால, அவர் நம்மை மிகவும பொல்லாதவர்கள என்று எண்ணி, நம்முடை பேரில மிகவும கோபமபண்ணி, எவ்விடத்துக்கு ஆவது நம்மை துரத்திவிடுவார்[5]; ஆகையால இதை குறித்து நாம ஒன்றும பேசாமல் இருக்கிறதே நமக்கு நல்லது என்று சொல்லி, பின்னும நம்ம ராசாவுடனே நமக்கு வேண்டிய நன்மைகளை சொல்லிக்கொண்டால[6], அவரே நமக்கு அதுகளை செய்வார் என்று சொன்னான. அதினபேரிலே அந்த நாலாவானை விட்டுவிட்டு, மற்ற மூன்று பேர்களும் கூடி, நம்முடைய தம்பி சொன்னது தவிர, நாம் சொன்னது தப்பிதம ஆகையால, அதை நம்ம ராசா கேட்டால நமக்கு மோசம வரும என்று தங்களுக்குள்ளே ஆலோசனை செய்து, அவர்கள மற்றொரு தேசத்துக்கு

[5] சமர்த்தி, நிறைவு. [6] தவறுகிறது, சறுக்குகிறது. [7] ஆழம, பள்ளம. [8] நீஞ்சுகிறது, நீந்துகிறது. [9] முழுகுகிறது, அழுந்துகிறது. [10] உபாயம, தந்திரம. [11] தெய்வாதீனம, திருவுளசசெயல, தற்செயல. [12] மிதவை, தெப்பம. [13] துண்டு, துணிக்கை. [14] கவ்வுகிறது, அப்புகிறது. [15] இழுக்கிறது, வலிக்கிறது. [16] அமிழந்தி, அழுந்தி. [17] கிளம்புகிறது, எழும்புகிறது. [18] நீட்டுகிறது, நீளப்பண்ணுகிறது. [19] பற்றுகிறது, பிடிக்கிறது. [20] ஆதரவு, சகாயம.

[1] சமர்த்தன், கெட்டிக்காரன். [2] பிதா, தகப்பன். [3] காரியக்காரன், விசாரணைக்காரன். [4] ராச்சியம், தேசம். [5] துரத்துகிறது, ஓட்டுகிறது. [6] சொல்லிக்கொள்ளுகிறது, கேட்டுக்கொள்ளுகிறது.

ஓடிப்போனார்கள. இநத சமாசாரம எலலாம அநத ராசா கேள்விப்படடு, தனனுடைய இளைய பிளளை புததியுளளவன எனறு அவனை கொணடாடி அநத பிளளைககு தன் படடததை கட்டினன, ஆனபடியி னலே புததி உள்ளவனே பெரியவன ஆவான.

௰௫வது. கதை.

ஒருமுத்த பாககியம் உள்ளவன ஆயிருநத ஒரு பெரிய வர்த்தகன இடததில, ஒரு குடிததனககா ரன் ஆயிரம வராகன கடனகே கேடடான. அநத வர்த்தகன அவனோடே உனககாக இரணடு பேர் பிணை[1] சொனனல, நீ கேடடபடியே பணம் கொடுப்பேன எனறன. அநத குடிததனககாரன இரணடுபேரை அநத வர்த்தகன் அணடை அபபடியே அழைததுககொணடுபோனன். அவர்கள அநத வர்த்தகனை பார்தது இநத குடிததனககாரன உமமிடததில வாஙகும் கடனை உமககு கொடாவிடடால, அநத பணஙகளை எஙகளில முனனினறோ[2] முனனினறு உமககு செலுதத கடவோம் எனறு, பிணை முறி எழுதி அவனுககு கொடுததார்கள. அதற்குமேல் அநத வர்த்தகன அநத குடிததனககாரனுககு, அவன கேடட தொகையை கொடுததான. சில வருஷஙகள சென்ற பிறகு அநத கெடு[3] தப்பின படியி னலே, அநத வர்த்தகன அநத குடிததனககாரன் அணடை வநது, அநத வடடியும முதலும் தணடின போது, அதை கொடுகக அவனுககு நிர்வாகம[4] இலலாததை கணடான. அபபால் அந்த பிணையாளிகள இருவரில ஒருவன மாததிரம் அபபோது பாககியவானய் இருநத படியினலே, அவன இடததிற்கு அநத வர்த்தகன் போய்; அயயா, நீர் அநத குடிததனககாரனுககு பிணையடட படிககு, என கடன் எல லாம நீரே கொடுகக வேணும எனறன. அவன இநத கடனுககு இருவர் பிணைபடடபடியினலே, நான மாததிரம் அநத பணம் எலலாம உமககு செலுதத மாடடேன எனறன. பிறகு அநத வர்த்த கன் இதை அநத ஊர் நியாயாதிபதியின இடததிலே சொலலிககொளள; அவன அநத பிணையாளியை அழைபபித்து, அதை குறிதது விசாரிதது, நீஙகள உஙகளிலே முனனினறு அநத கடனை தீர்க்க கட வோம எனறு அநத வர்த்தகனுககு பிணைமுறி எழுதிககொடுததிருககிறீர்கள; ஆகையால இநத கடன எலலாம நீயே கொடுகக வேணடியது நியாயமாய் இருககிறது எனறு சொலலி, அநத பணம் முழு தும அவனிடததிலே வாஙகி அநத வர்ததகனுககு கொடுபபித்தான.

௰௬வது. கதை.

ஒருதேசததிலே துரைததனமபணணிககொணடிருநதவொருராசகுமாரன், அநததேசததிலேயி ருநதபிரசைகளுககு[1], புலிமுதலானபொலலாதமிருகஙகளினலேயுணடாயிருநதசேதஙகளைக்கு றிததுககேள்விபபடடான; ஆனபடியினலேயவனநதமிருகஙகளையெலலாஙகொலலவேணுமெனறு நி னைதது, அதற்குவேணடியமனிதர்களுடனேயுஞசுறவையுள்ள[2] நாய்களுடனேயுமவேட்டைககுப்போய், ஒருகாடடிலேபிரவேசிததுவேடடையாடினன. அபபோதநதராசகுமாரனுககுககுடிககத்தணணீர்வேண டியிருநதபடியினலே, அவனநதக்காடடிலேயிருநதவொருகுளததுக்குப்போய், தணணீர்குடிதது, பின பஙகேசமீபததிலிருநதவொருபெரியமரததின்னடையில்ப்போனபோது, அவவிடததிலொருபெரியரி ஷியைக்கணடு, அவருககுப்பூசிதை[3] பணணினன. அவரிவனைராசகுமாரனெனறுதெரிநதுகொண்டு, இ வனுககுத்தக்கமரியாதையைப்பணணி, இவனைபபார்த்து, ஐயா, என்சினேகிதரானஉமமுடையதகபப னர்சுகமாயிருககிறராவெனறுகேட்டார். அநதராசகுமாரன், என்னுடையபிதாசிலமாசஙகளுககுமுன

[1] பிணை, சாமின். [2] முன்னின்றன், நேர்பட்டவன். [3] கெடு, தவணை. [4] நிர்வாகம், சத்தி.
[1] பிர்சை, சனம். [2] சுறவை, சுறுக்கு. [3] பூசிதை, உபசாரம்.

னேயிறநதுபோனார்; இபபோது நான் துரைத்தனமபணணிககொணடிருககிறேனெனறான. அநதரிஷிய தைககேட்ட நதராசாவுககாகவிசனபபடடு, பினபநதராசகுமாரனைத்தயவுடனேபார்த்து, உமமுடையபத கப்பனொருநலலராசாவாயிருநதார், நீருமவரைப்போலவே நனமையுளளவொருராசாவாயிருககவேண டுகிறேன; பிரசைகளெலலாருமுமமுடைய துரைத்தனததினமேலேவிசுவாசமாயிருககுமபடி நீர் துரைத் தனஞசெயயவேணும; அபபடியிருநதாலுமமுடையதேசமெபபோதுமுமமைவிட்டுபோகாது; அதி னாலுமககிநதலோகததினுடைய நனமையெலலாமுணடாகும; நீரேழைகளுககெககாலமுமுபகாரமபண ணிககொணடும, அவர்களுககுபபொலலாதவலியவர்களாலேயொருககாலுநதொநதரையுணடாகாமல, அ வர்களைக்குறித்துவிசாரணைபணணிககொணடுமிருககவேணும; நீரிபபடியிருநதால, சுவாமியுமமிடத திலேசநதோஷமாயிருபபார்; அதினாலுமககிகபரஙகளிலே[4] யுணடான நனமைகளெலலாமுணடாகும; எனறிபபடிசிலபுததிகளையவனுககுச்சொலலிபவனையனுபபினார். அதுமுதலநதராசகுமாரனவர்சொன னபுததியினபடியேநடநதுகொணடுசுகபபடடிருநதான.

௰௭வது. கதை.

ஒருவர்த்தகனிடததிலொருதரமபததுவராகனும, பினனொருதடவையெடடுவராகனும, வேறொரு நாளபததுமாககாலரிசியுஙகடனுககவாஙகினவொருகுடிததனககாரனிறநதுபோனபினபு; அநத வர்த்தகனவனகுமாரனிடததிலேவநது, உமமுடையபிதா எனனிடததில்க்கடனுககவாஙகினபொருள்களை யெனககுக்கொடுமெனறவனைக்கேடடு, அவனதுகளைக்கொடாமையால, அநதவர்த்தகனவவிடததையநி யாயாதிபதியிடததிலேயதைபபறறிமுறையிடடுககொணடான. அநதநீதிககாரனநதக்குடிததனககாரன குமாரனையழைபபிதது, அதைககுறிததுவிசாரிததபோது, அவன் நானொனறுமிவருககுககொடுககவேண டியதிலலையெனறான. பினபநதவர்த்தகனவனுடையதகபபனுககுததான்கடனுககொடுததபொருள்கள பலவறறுககுளளேயொனறைமாததிரமொருசாக்ஷியினாலேவெளிபபடுததி, மறறபொருள்கள்தானவனுக குக்கொடுத்ததறகுத்தனககுச்சாக்ஷிஇலலையெனறான. அபபோதநதநியாயாதிபதியநதப்பிரதிவாதியைப் பார்த்து, இநதவாதிதனசாக்ஷியினால்ருசுபபடுததினவொருபொருளமாததிரமிநதவாதிககுநீகொடுககவேண டியதெனறுதீர்பபுசெயதான. பிரதிவாதியிலலையெனறுசொனனபல்பொருளகளுககுளளே, ஒருபொ ருள்மாததிரமவனவாஙகினதுககுச்சாக்ஷியிருநதால, அதினாலேதானேயெலலாபபொருள்களுமவனவாங கினதுணடெனறுநிசசயிககலாமெனறு, தர்மசாஸதிரமிருககிறதேயெனறநதவாதிசொனனான. அதற கநதநீதிககாரன, உனனிடததிலகடனவாஙகினமனுஷன, தானதுகளைவாஙகினதிலலையெனறால, நீ சொலலுகிறபடிககுநடபபிக்கத்தககது; இநதப்பிரதிவாதியநதக்கடனைவாஙகினவனுககுமகனானபடியி னாலே, இவனிடததிலேயபபடிநடபபிக்கக்கூடாது; இபபோது நானசொனனதீர்ப்பினபடியேநடபபிக கவேணும; இபபடிதர்மசாஸதிரஞசொலலியிருககிறதெனறவனுககுத்தெரிவிததான.

௰௮வது. கதை.

ஒருசெட்டி மேறகுதேசததிலிருநதுபததுமாடுகளினமேலவெலலப்பொதிகளேறறிக்கொணடுவ ருகையில, அநதவழியிலேயொருமாடுதுளளித்தன்பொதியைக்கீழேபோடடுவிடடது. அபபோ தநதவர்த்தகனஙகேமாடுமேய்த்துக்கொணடிருநதவொருபையனையழைதது, அடாதமபி, இஙகேதன னுணடவெலலபபொதியையெனனோடேகூடபபிடிததுத்தூககியிநதமாட்டில்மேலேபோடு, பிறகுனக குதிரமபவெலலந்தருவேனெனறுசொலலியவனைவருநதினான[1]. அநதபபையன்நலலதெனறபபடியே

[4] இகபரஙகள், இந்தலோகமும் மேல்லோகமும்.

[1] வருந்[illegible]தை, வேண்டுகிறது.

யந்தப்பொதியையவ்வெருதின்மேலேபோட்டப்பொதிக்காரனுக்குதவிசெய்தான். அப்பாலந்தச்செட்டிதனனுடையவாக்குத்தத்தத்தின்படியேயந்தப்பையனுக்கொருவுண்டைவெல்லங்கொடுத்தான். அந்தப்பையனதுகொஞ்சந்தானே, நீசொன்னபடிக்கெனக்குநிரம்பவெல்லங்கொடுவென்றான். அந்தவர்த்தகனவனுக்குப்பின்னுங்கொஞ்சவெல்லங்கொடுத்தான். அப்போதுமந்தப்பையனிதுவுங்கொஞ்சந்தான், எனக்குநீசொன்னபடிநிரம்பக்கொடுவென்றவனோடேபோராடினான். அப்பாலந்தவர்த்தகனவனுக்குப்பின்னும்பின்னுங்கொஞ்சங்கொஞ்சமாயெவ்வளவுவெல்லங்கொடுத்தாலும், இதுவுங்கொஞ்சந்தானிதுவுங்கொஞ்சந்தானென்றுசொல்லி, அவனோடேவழக்காடிக்கொண்டேயிருந்தான். அப்போதுதற்செயலாயந்தவழியிலேவந்தவொருவழிப்போக்கனோடேயந்தச்சங்கதியை யந்தவிருவருஞ்சொல்லிக்கொண்டார்கள். அந்தப்பாட்டைசாரியந்தப்பையனுக்கந்தவர்த்தகன்முன்னடி[2] கொடுத்திருந்தவெல்லம்முழுமையுமந்தனிடத்திலேபொதுக்கட்டச்சொல்லி[3], அதற்குமேலந்தச்சங்கதியைவிசாரித்தான்; பிறபாடவனதனனொருகையிலேகொஞ்சம்வெல்லத்தையெடுத்துக்கொண்டு, அதைக்காட்டிலுங்கொஞ்சமதிகமாகமற்றொருகையிலேயதையெடுத்துக்கொண்டு, அட்டம்பி, இந்தவிரண்டுகையிலிருக்கிறவெல்லத்திலேயெதுநிரம்பவிருக்கிறதென்றந்தப்பையனைக்கேட்டான். அதற்கவனுமமுடையவலக்கையிலே[4] யிருக்கிறதுநிரம்பவிருக்கிறதென்றான். அப்புறமந்தப்பாட்டைசாரியந்தப்பையனைப்பார்த்து, இதுநிரம்பவிருக்கிறதென்றுநீயேசொல்லுகிறபடியினாலே, இதையேநீவாங்கிக்கொண்டுபோவென்றான். அந்தப்பையனதைவாங்கிக்கொண்டு, வெட்கத்தோடேயொன்றும்பேசாமல்த்தன்பாட்டுக்குப்போய்விட்டான்.

௰௯-வது. கதை.

ஒருதேசத்திலொருகாலத்திலயானைமுதலாகியபொல்லாதமிருகங்களராத்திரியிலேகிராமந்தோறும்வந்துவிழுந்து, அங்குள்ளபயிர்களையெல்லாமநாசமபண்ணிக்கொண்டிருந்ததுகள்; அதினாலந்தக்குடிகளுக்குப்பெரியநஷ்டமுண்டானபடியினாலே, அதையவர்களதங்களராசாவுக்குத்தெரிவித்தார்கள். அந்தராசாவந்தக்குடிகளுடையரக்ஷணையை[1] குறித்து, அந்தமிருகங்களைக்கொல்லுகிறதற்காகத்தான்வேட்டைக்குப்போகவேணுமென்று, அந்தத்தேசத்திலுள்ளவேட்டைக்காரர்களிலனேகரையுந்தனசேனைகளையுங்கூட்டிக்கொண்டு, தன்மந்திரியோடேகூடப்போயொருகாட்டிலேபிரவேசித்துவேட்டையாடினான். அப்போதங்கேயொருபெரியரிஷிலோககாரியங்களையெல்லாமறந்தவனபோலத்தபசுபண்ணிக்கொண்டிருந்தான். அந்தராசாவவனைக்குறித்துத்தன்மந்திரியோடேபுகழ்ந்துபேசுகையிலே, இந்தரிஷியினுடையமனசிந்தவுலககாரியங்களிலொன்றிலுமவேறுபடமாட்டாதேயென்றான். அதற்கந்தமந்திரியப்படிக்குத்தாங்களசொல்லவேண்டியதில்லை; எப்படிப்பட்டவர்களுந்தாங்களதாங்களபண்ணுகிறசகவாசப்படிக்கு[2] கெட்டவர்களுந்நல்லவர்களுமாவார்கள்; ஆகையாலிவனுக்குக்கெட்டசகவாசமுண்டானால், இவனுடையநல்லகுணமுமமாறுபட்டுப்போகலாம்[3]; அதற்குச்சாக்ஷிநான்தங்களுக்குக்காண்பிப்பேனென்றான். பின்பந்தமந்திரியந்தரிஷியினிடத்துக்குப்போய், அவனுக்குத்தக்கமரியாதைசெய்து, அவனோடேசற்றுநேரம்பேசிக்கொண்டிருந்து, திரும்புகாலையிலே[4] அவனுக்கொருமதிப்புள்ளகத்தியைவெகுமானமாய்க்கொடுத்துவிட்டுவந்துவிட்டான். அந்தக்கத்தியலங்காரம்[5] உள்ளதாயிருந்தபடியினாலே, அந்தரிஷியதையெப்போதுந்தனகையிலேயேவைத்துக்கொண்டிருந்து, முதல்முதல் உல்லாசத்துக்காக[6] அவ்விடத்திலுள்ளகொடிகளையுஞ்செடிகளையும்வெட்டிக்கொண்டிருந்தான்; பிற்பாடங்குள்ளமரங்களையும்மிருகங்களையும்வெட்டிக்கொண்டிருந்து, கடைசியிலேமனுஷர்களையுமவெட்டத்தொடங்கி

² முன்னடி, முன்னமே. ³ பொதுக்கட்டவிடுகிறது, மத்தியஸ்தரிடத்தில்வைக்கிறது. ⁴ வலக்கை, வலதுகை.

¹ ரக்ஷணை, ரக்ஷகம். ² சகவாசம், கூட்டப்பழகுதல். ³ மாறுபடுகிறது, வேறுபடுகிறது. ⁴ காலே, போது-காலம். ⁵ அலங்காரம், சிங்காரம். ⁶ உல்லாசம், வேடிக்கை.

ஞன. அவனப்படிசெய்ததினாலே, சிலர்வனைப்பிடித்துக்கொண்டுவந்து, அந்தராசாவினிடத்திலவிட்டு, அவனபேரிலேமுறையிட்டுக்கொண்டார்கள. அப்போதந்தராசாவந்தமந்திரியைப்பார்த்து, முனனேயிவன்நலலவனாயிருந்தானே, இப்போதிவனகெட்டுப்போனதற்குநிமித்தமெனனவெனறுகேட்க; இதற்குக்காரணம்முனனேநானிவனிடத்துக்குப்போய், ஒருகததியையிவனகையிலேகொடுததுவந்ததுதானெனறந்தமந்திரிசொனனான். அப்போதந்தராசாவிவனிப்படியானதினாலேசகலருககுஞ்சகவாசத்தினாலேயேயெலலாக்குணஙகளுமமாறுபடுமெனறுநீர்முனனேசொனனதுணமைதானெனறவனைவிசுவசித்தான்.

௨௰வது. கதை.

ஒருவன்தன்னவசர[1] நிமித்தமாயிரமவராகனபெறததககவொருபதககத்தை, மறறொருவனிடத்திலேநமபிக்கையினால்க்கொதுவை[2] யாகவைதது, அதினபேரிலநூறுவராகன்கடனாகவாஙகினான. அந்தககடனெட்டுவருஷஙகளுககுளளேதீததபபடாமையினாலே[3]அதினவட்டி[4] யந்தமுதல்ப்பணத்துக்கு[5]ச்சரியாய்விட்டது. பிறகந்தக்கடனபட்டவன, தனககுபபணஙகிடைததபோது, அந்தக்கொதுவைக்காரனிடததுககதைக்கொண்டுபோய், உமமுடையகடன்முதலும்வட்டியுமாகியவிருநூறுவராகனுமிதோநான்செலுத்துவேன; உமமிடத்திலேநானகொதுவையாகவைததபதக்கததையெனககுமறுபடியுஙகொடுததுவிடுமெனறுகேட்டான். அதுகேட்டந்தககொதுவைக்காரனவனைப்பார்த்துச்சிரிதது, அய்யா, நீர்கொடுககல்வாஙகல்செய்கிறதொழிலினுடையஞாயததிலேமுனனேபினனேபழகினவரலலபோலவெனககுத்தோறறுகிறது; அந்தஞாயமெனனவெனறால, ஒருவனதனனொருபொருளைமறறொருவனிடத்திலேயடைவாகவைதது, அதினபேரிலேயவனபணததைக்கடனாகவாஙகியிருந்து, அதினவட்டியதறகுச்சமானமாய்[6]விடுகிறமட்டுமதுசெலுத்தப்படாவிட்டால், அந்தவடைவுவைததவனதையிழந்துபோகக்கடவனெனறு, தர்மசாஸ்திரமிருககிறதேயதுதானென்றான. உடனேயந்தக்கடனாளியந்து, இதுவநியாயமாயிருககிறதே, தர்மசாஸ்திரமிப்படியிருககுமாவெனறு, அவனசொல்லிலேயனுமானப்பட்டு[7], அதையொததுககொளளாமல, தனவியாசசியததையந்தவூர்நியாயசபையிலேபோய்ச்சொலலிககொணடான. அந்தநியாயாதிபதியந்தபபிர்திவாதியையழைபபிததவனவாககுமூலததைக்[8] கேட்டபின்பு, தன்சபையிலேயிருந்தபணடிதர்களைபபார்த்து, ஒருமுதல்ப்பணத்தினவட்டியந்தமுதலுககுச்சமமானால, அதற்காகவைததவிடு, அதினுடையவனுககிலலாமல்ப்போமெனறிந்தபபிர்திவாதிசொலலுகிறானேயிதுசரிதானா, நீஙகளிந்தவியாசசியததையாலோசிததுச்சொலலுஙகளெனறான. அவர்கள, ஐயா, ஒருமுதலுக்கதனோடுசம்மானவட்டியுணடானபோது, அதறகீடாகவைததபொருளந்தமுதலுமவட்டியுமானவிரண்டுதொகைககுஞ்சறறேறககுறைய[9] சமானமதிப்பையுடையதாயிருந்தால, அதையுடையவனிழந்துவிடக்கடவனே. அந்தஇடநதவிரண்டுககும்மிகவும்மிஞ்சியிருந்தால, அதையுடையவனதையிழந்துபோகக்கூடாதெனறுதர்மசாஸ்திரஞ்சொலலுகிறது; அதனாலிப்பிர்திவாதிசொலலுகிறதுதகாதெனறார்கள[10], அதற்கந்தநியாயாதிபதிசந்தோஷிதது, அப்படியேதீர்ப்புசெய்தவர்களையனுப்பினான.

௨௧வது. கதை.

ஆதார்புரமெனறவொருபட்டணத்திலே, வாணிசசியதிலகனெனறவொருவர்த்தகன், தன்மரண[1] காலததிலே, தன்மகன்மிகவுமிளந்தை[2] யாயிருந்தபடியினால, பரபபிலே[3]கிடந்ததன்பொருள்

[1] அவசரம, அதகறை. [2] கொதுவை, அடைவு-ஈடு. [3] தீததுகிறது, தீர்க்கிறது. [4] வட்டி, சொச்சம். [5] முதல்ப்பணம, அசலிப்பணம. [6] சமானம, சமம். [7] அனுமானம், சந்தேகம். [8] வாககுமூலம, வாய்ப்பிறப்பு. [9] சறறேறககுறைய, கொஞ்சமேறததாழ. [10] தகாது, அடுககாது.

[1] மரணம், சாவு. [2] இளந்தை, குழந்தை. [3] பரப்பிலே, விரிவிலே.

களெல்லாந்தொகுத்து[4], அதற்கோர்மாணிக்கம்[5] வாங்கினன்; அதையொருசிமிழிலும்[6] மணலையொருசிமிழிலும்போட்டு, அந்தவிரண்டையுமுத்திரித்து[7], தனக்குநம்பிக்கையுள்ளசினேகிதனொருபெரியவர்த்தகனுசெய்துகொண்டிருந்ததன்னடைவீட்டுக்காரனையழைப்பித்து, பத்துபேர்சாக்ஷிகளையுங்கூட்டிவைத்துக்கொண்டு, என்மகனுக்கியவிந்தக்குழந்தைக்குப்பருவம்[8] வந்தவுடனே, இவ்விரண்டுபரணிகளையுமிவன்கையிலேநீர்கொடுத்துவிடவேண்டுகிறேனென்றுசொல்லி, அதுகளையந்தப்பெரியவர்த்தகன்வசத்திலேவைத்திறந்துபோனன். பின்புசிலவருஷங்களகழிந்து, அந்தப்பிள்ளைக்குப்பக்குவகாலமுமவிவேகமுமவந்தறிந்து, அந்தவர்த்தகனந்தப்பிள்ளையாண்டானையழைப்பித்து, அவனபிதாசொன்னபடியேயவ்விரண்டுசிமிழ்களையும்முன்னேயசிலசாக்ஷிகளின்முன்னிலையிலேயே, அவனதகப்பனமுத்திரைக்குபாதொருபின்னமுமில்லாமல்வனுக்கொப்பித்தான். அச்செட்டிமகன்வர்களமுன்னிலையிலேயேயதுகளைத்திறந்துபார்த்து, ஒன்றிலேயொருமாணிக்கமும்மற்றொன்றிலேமணலுமிருக்கக்கண்டு, இதிலேமணல்வரவேண்டியநிமித்தமென்ன, ஏதோபித்தலாட்டம்[9] இதிலேநடந்தாற்போலக்காணுதென்றனுமானப்பட்டு, ஒருசிமிழிலேயிருந்தமாணிக்கத்தைத்திருடிக்கொண்டு, அதிலேபதிலுக்குமணலைப்போட்டு, என்னைமோசம்பண்ணினுயென்று, அந்தப்பெரியவர்த்தகனுடேசச்சரவுபட்டு, அந்தவூர்நியாயாதிபதியினிடத்துக்குப்போய், அந்தவிரண்டுசிமிழ்களையுமவனுக்குக்காட்டித்தனவழக்கையவனுடுசொல்லிக்கொண்டான். அந்தநியாயாதிபதியந்தப்பிரதிவாதியையழைப்பித்து, முன்னேயந்தவிருவர்சொல்லையுங்கேட்டு, அதோடேகூடவந்தவிருவருடையசாக்ஷிவாக்குமூலங்களையுங்கேட்டுக்கொண்டான்; அப்பாலொருசிமிழிலிருந்தமாணிக்கத்தையும்மற்றொருசிமிழிலிருந்தமணலையுமொருதராசிலவைத்துநிறுத்துப்பார்த்தான். அந்தவிரண்டின்நிறையுஞ்சரியாவிருந்ததைக்கண்டு, அந்தச்சபையாரெல்லாருங்கேட்க, அச்செட்டிமகனைப்பார்த்து, இந்தமாணிக்கம்வைத்தவிடத்திலேமோசம்போகாமல, இந்தமணலின்நிறையளவுதானதான்வைத்தமாணிக்கத்தினநிறையென்றபினனாலேநீயறிந்துகொள்ளும்பொருட்டு, உனபிதாசெய்தவுபாயமிதுவென்று, அவனுக்குத்தெளியச்[10] சொல்லியனுப்பிவிட்டான.

௨௰௯. கதை.

ஒருகுடித்தனக்காரனதனனிடத்திலிருந்ததிரவியங்களை[1] ஒருபெரியவர்த்தகன்னடைவைத்துப்போட்டொருதூரதேசத்துக்குப்போனன். பின்பிரண்டுவருஷத்துக்குமேலேயவன்திரும்பிவந்து, அந்தவர்த்தகனிடத்துக்குப்போய், ஐயா, நானுமமிடத்திலேயடைக்கலமாக[2] வைத்துப்போனபொருளகளைத்தயவுபண்ணியெனக்குக்கொடுக்கவேணுமென்றுன. அந்தவர்த்தகன்நீயென்னிடத்தில்பணமெப்போதுவைத்தாய், நீபொய்சொல்லுகிறுய், என்றவன்பேரிலேகோபித்துக்கொண்டவனைத்திட்டியனுப்பிவிட்டான். அப்பால்நதக்குடித்தனக்காரனந்தவூர்நியாயாதிபதியினிடத்திலேவந்து, தனனொருவர்த்தகனிடத்திலேநம்பிக்கையினபேரிற்பணம்வைத்துப்போட்டொருதூரதேசத்துக்குப்போனதும, அந்தப்பணத்தையவனிடத்திலேவைத்ததற்குத்தனக்குச்சாக்ஷிகளில்லாமையும, பிறபாட்டுதனனிடத்திலேவைத்ததில்லையென்றவனதன்னைமோசம்பண்ணினதுமசொல்லி; அதையவன்னடைவாங்கித்தனக்குக்கொடுக்கவேணுமென்றுமுறையிட்டுக்கொண்டான. அதற்குமேல்நதநியாயாதிபதி, அந்தவர்த்தகனையழைப்பித்து, அவன்னடைவைத்தபணத்தைக்குறித்துக்கேட்டபோதும, அவனதில்லையென்றேசாதித்துவிட்டான்[3]. அப்போதந்தநியாயாதிபதியந்தவர்த்தகனையனுப்பிவிட்டு, சிலமாசங

[4] தொகுக்கிறது, சேர்க்கிறது. [5] மாணிக்கம், ஒருவகைரத்தினம். [6] சிமிழ், பரணி. [7] முத்திரிக்கிறது, அடையாளம்பண்ணுகிறது. [8] பருவம், பக்குவகாலம். [9] பித்தலாட்டம், சூது. [10] தெளிகிறது, சந்தேகந்தீருகிறது.

[1] திரவியம், பொருள். [2] அடைக்கலம், ஆதரவு. [3] சாதிக்கிறது, பிடிவாதிக்கிறது.

னபோனபின்புதனக்குநம்பிக்கையுள்ளவொருவனையார்த்துநீயந்தவர்த்தகனண்டைபோய்க், கொஞ்சம்பணத்தையவனிடத்திலேவைத்துவைத்து, சிலகாலம்போனபின்பதைக்குறித்துநீயவனைக்கேளென்றவனுக்குச்சேதியமாய்க்கற்பித்து[4] அவனையனுப்பினான். அப்படியேயவனந்தவர்த்தகனண்டைத்தன்பணத்தைவைத்துப்போட்டு, சிலகாலம்பொறுத்து[5] அதைக்குறித்தந்தவர்த்தகனைக்கேட்டபோது, அந்தவர்த்தகனந்தக்குடியானவனுக்குச்சொன்னபடியேயிவனுக்குஞ்சொன்னான். அதைக்கேள்வியாலேயறிந்தநியாயாதிபதி, அந்தவர்த்தகனந்தக்குடித்தனக்காரனைமோசம்பண்ணினதுமெய்தானென்றுநிச்சயித்து, அந்தவர்த்தகனைத்தண்டித்து[6] அந்தப்பொருள்களையெல்லாமவனிடத்திலிருந்துவாங்கி, அந்தக்குடித்தனக்காரனுக்கும், பின்பந்தநியாயாதிபதியாலனுப்பப்பட்டவொருத்தனுக்குங்கொடுத்துவிட்டான்.

௨௩வது. கதை.

ஒருகாலத்திலொருதேசத்திலேயொருதுலுக்கசாதிமனுஷன்மகாராசாவாகவிருந்துதுரைத்தனம்பண்ணினான். அவனுக்கொருகுமாரத்திரூபவதியாயும்[1] புத்திசாலியாயுமிருந்தாள். அவளுக்குக்கலியாணத்துக்குயோக்கியமான்காலம்வந்தபோது, நல்லகுணங்களும்நல்லநடத்தைகளுமுள்ளவொருராசாவையவள்கலியாணம்பண்ணிக்கொள்ளநினைத்து, அப்படிப்பட்டவொருவனெங்கேயிருக்கிறானென்றுவிசாரித்துக்கொண்டிருந்தாள். அப்போதிந்துராசாக்களிலொருவனப்பேர்ப்பட்டவனென்றவளுக்குத்தெரிந்தபடியினாலே, அவனையேயவள்கலியாணம்பண்ணிக்கொள்ளவேணுமென்றுதனக்குள்ளேதீர்மானித்துக்கொண்டு, பின்புதன்தகப்பனுக்குத்தன்மனதையறிவித்தாள். அவள்சொன்னராசாதனக்குக்கப்பம்[2] கட்டுகிறவனாயிருந்தபடியினாலே, அந்தப்பிதாவப்படியேசெய்விக்கிறேனென்றுதன்குமாரத்திக்குவாக்குக்கொடுத்து[3], பின்பந்தராசாவுக்குநீர்சீக்கிரத்திலிவ்விடத்துக்குவந்து, நம்முடையமகளைக்கலியாணம்பண்ணிக்கொண்டுபோமென்றவனுக்குக்கடுதாசியெழுதியனுப்பினான். அந்தராசாவொருதுலுக்கசாதிப்பெண்ணை, ஒருஇந்துசாதிமனுஷன்கலியாணம்பண்ணிக்கொண்டால், அவனையந்தச்சாதியார்தங்கள்சாதியைவிட்டுத்தள்ளிப்போடுவார்கள்; ஒருஇந்துசாதிப்பெண்ணையொருதுலுக்கன்கலியாணம்பண்ணிக்கொண்டால், அந்தச்சாதியார்வனையவன்சாதியினின்றுந்தள்ளமாட்டார்கள்; என்றிப்படிசிலஞாயங்களெழுதியந்தத்துலுக்கமகாராசாவுக்கனுப்பினான். பிறகிந்தக்காரியத்தின்மேலிந்துராசாக்களுக்குந்துலுக்கச்சாதிமகாராசாவுக்கும், காகிதங்களாலேசிலகாலம்பேச்சுகள்நடந்துகொண்டிருந்ததுகள். அப்படியிருக்கையிலேயந்தப்பெண்ணிறந்துபோனாள். பின்பந்தமகாராசாநீங்களெனக்குமுன்சொன்னபடியுங்கள்சாதிப்பெண்ணையெனக்குக்கொடுங்களென்றிந்துராசாக்களைக்கேட்டான். அப்போதிந்துராசாக்களெங்கள்சாதிப்பெண்ணினுடையபிள்ளைகளும்முடையதுரைத்தனத்தைத்தருவதாகவும், இந்துச்சாதிப்பெண்ணைக்கலியாணம்பண்ணிக்கொண்டவனேயெப்போதும்மகாராசாவாயிருக்கத்தக்கவனென்றும், இப்படிக்குநீருடம்படிக்கையெழுதியெங்களுக்குக்கொடுத்தால், எங்களபெண்ணையுமக்குத்தருவோமென்றுசொன்னார்கள். அதற்கந்தமகாராசாசம்மதித்தபடியேயவர்களுக்குடம்படிக்கையெழுதிக்கொடுத்து, இந்துச்சாதியிலொருபெண்ணைக்கலியாணஞ்செய்துகொண்டு, பின்புவளுடையபிள்ளைகளுக்கேதன்துரைத்தனத்தையுங்கொடுத்தானும்.

௨௪வது. கதை.

நீதிதப்பாமல்ராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்தசந்தனுவென்றவொருராசா, தம்முடையமுதல்த்தாரம்[1] தப்பிப்போன[2] பிறபாடு, ஒருநாளொருகாட்டிலேவேட்டைக்குப்போனார்; அங

[4] கற்பிக்கிறது, போதிக்கிறது. [5] பொறுக்கிறது, காத்திருக்கிறது. [6] தண்டிக்கிறது, தெண்டிக்கிறது.

[1] ரூபவதி, அழகி. [2] கப்பம், பகுதி. [3] வாக்குக்கொடுக்கிறது, வார்த்தைகொடுக்கிறது.

[1] தாரம், பெண்சாதி. [2] தப்பிப்போகிறது, இறந்துபோகிறது.

கேயோரு கிராமத்திலே மிகவும் அழகியான ஒரு பெண்ணைக் கண்டார்; அவளைத் தாம் கலியாணம் பண்ணிக்கொள்ளவேணுமென்று யோசித்து, அப்பால் தம்முடைய அபிப்பிராயத்தைத் தம்முடைய சாரதிக்குச்[3] சொல்லி, நீ அந்தப் பெண்ணின் பிதாவினிடத்திற்குப் போய், இதையவனுக்கறிவியென்று அவனையனுப்பினார். அவனப்படியே அந்தக் கன்னிகையின்[4] தகப்பனாகிய செம்படவத் தலைவனுக்கு, தன்னெசமானன் கருத்தையறிவித்தான். அதற்கந்தச் செம்படவன் ராசன் அப்படிப்பட்ட மனசந்த ராசாவுக்குண்டாயிருக்கிறதென்கை நுக்குப் பாக்கியந்தான்; ஆகிலுமிந்த ராசா தம்முடைய துரைத்தனத்தை, முன்னிறந்துபோன தம்முடைய பெண்சாதியினிடத்திலே தமக்குப் பிறந்திருக்கிற குமாரனுக்குக் கொடாமல், இனிமேலென் குமாரத்தியினிடத்திலே தமக்குப் பிறக்கப்போகிற புத்திரனுக்குக் கொடுக்கச் சம்மதித்து, அதைக்குறித்தெனக்கு வாக்குத்தம் பண்ணினால், அப்போதவருக்கென் மகளைக் கொடுப்பேனென்றான். அந்தச் சாரதி திரும்பித் தன்னெசமானிடத்திற்கு வந்து, அந்தச் செய்தியையவருக்குச் சொன்னவுடனே, அவரிது முடியாத காரியமென்றெண்ணிக்கொண்டு, அதற்குப் பிரதியுத்தரமொன்றுஞ் சொல்லாமல், தம்முடைய பட்டணத்துக்குத் திரும்பி வந்துவிட்டார். ஆனபோதைக்குமவர் அந்தப் பெண்ணையே நினைத்துக்கொண்டு, சாப்பாடு முதலானதுகள் ருசிக்கிறதுமில்லாமலும், ராத்திரிகளிலே யவருக்கு நித்திரையில்லாமலும், நாளுக்கு நாள் விசாரத்தினாலே[5] யவர் மெலிந்துபோனார்[6]. அந்த ராசாவின் குமாரனாகிய காங்கேயன், தன் தந்தை வர வர மெலிந்துபோனதைக் கண்டு, அதற்கு மூலமின்னதென்றதன் பிதாவின் சாரதியினாலேயறிந்துகொண்டு, அப்பால் அவருக்குத் திருத்தி[7] பண்ணுகிற நிமித்தம், அந்தப் பெண்ணின் பிதாவினிடத்திற்குப் போய்; ஓ தாதா[8], உம்முடைய கோரிக்கையின்படியே யும்முடைய அப்பேருக்கு, என் தந்தையின் பட்டத்தை நான் கொடுப்பேனென்றும் அக்குவார்த்தைபாடு பண்ணுகிறேன், அவருக்குமும்முடைய குமாரத்தியையெனக்குத் தாயாகக் குவிக்கக்கொடுமென்று கேட்டான். அதற்கவனும்முடைய வரசாட்சியை[9] உம்முடைய தம்பிக்கு நீர் தானங்கொடுத்த போதும், இனிமேலுமக்குப் பிறக்கப்போகிற குமாரர்கள் க்ஷத்திரியர்களாகையினாலே, ஒருவேளையிந்தப் பட்டத்தை வழக்காடிப் பறித்துக்கொள்வார்களேயென்றான். அப்போது காங்கேயன், தாதா, நானிந்நிமித்தம் விவாகமே[10] பண்ணிக்கொள்வதில்லையென்றுங் கூடவுமக்கித்தோ வார்த்தைபாடு பண்ணினேனென்றான். அதின்பேரிலே யந்தச் செம்படவத் தலைவன், தன் மகளை யந்த ராசாவுக்குக் கொடுக்கச் சம்மதித்து, அவளைக் காங்கேயன் பின்னே கூட்டிக்கொண்டு வந்தான். காங்கேயனந்தப் பெண்ணைத் தன் தகப்பனார் சமுகத்துக்கு முன்னே விட்டு, தானுமவருடைய காலிலே விழுந்தான். அப்போதந்த ராசா, மகனே, லோகத்திலே தகப்பன்மார்களுக்குச் சற்புத்திரர்கள் செய்கிற உபகாரத்தைக் காட்டிலும் நீயெனக்காயிரம்பங்கதிகஞ் செய்தாய்; பிதாக்கள் தங்கள் குமாரர்களுக்குச் செய்யவேண்டிய உபகாரங்களிலே, நானொன்றும் உனக்குச் செய்யவில்லையென்று சொல்லி யந்தக் குமாரனை முகத்தழுவிக்கொண்டான்.

௨௫-வது கதை.

நாற்பது வருஷத்துக்கு முன்னே, தெற்கு தேசத்திலே ராமநாதமென்கிற பட்டணத்திலே சேர்ந்த கிராமங்களையடுத்த[1] காடுகளிலே வெகு மனுஷர்கள் வாசம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குச் சீவனம்[2] பண்ணுகிறதற்கு வேறே முகாந்திரமில்லாமையால், அந்தக் காடுகளுக்குச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலேயும் பட்டணங்களிலேயும் அவர்களாயுதங்களோடே போய்விழுந்து, அந்த மனுஷர்களையடித்தும், கொன்றும், இப்படிப் பல தொந்தரைகளைச் செய்தும், அவர்களுடைய சொத்துக்களைக் கொள்ளையிட

3 சாரதி, தேர்ப்பாகன். 4 கன்னிகை, கலியாணமில்லாத பெண். 5 விசாரம், சிரமம். 6 மெலிந்தது, இளைத்தது. 7 திருத்தி பண்ணுகிறது, பூர்த்தி பண்ணுகிறது. 8 தாதா, பாட்டன். 9 அரசாட்சி, அரசாளுதல். 10 விவாகம், கலியாணம்.
1 அடுத்த, சேர்ந்த. 2 சீவனம், பிழைப்பு.

டுச்சீவனம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். அந்தத்தேசத்துராசாவாகியசேதுபதியென்றவர், தம்முடையதேசத்துக்குண்டாகிய விந்தப்பெரியநஷ்டத்தைப்போக்கவேணுமென்று, தம்முடையமந்திரியாகியமுத்திருளப்பிள்ளையென்றவனோடேசொன்னார். அவனந்தத்திருடர்களிலேயனேகம்பேர்களைப்பிடித்துப்பலமானதெண்டனைசெய்தான். அப்படிசெய்தாலுமந்தத்தேசத்திற்கந்தத்திருடர்களாலுண்டானநஷ்டங்களைபோனதில்லை; ஆகையாலந்தமந்திரியதின்பிறகந்தத்திருடர்கள்வாசம்பண்ணினகாடுகளின்சமீபத்திலேயொருபெரியவேரியுண்டாக்கி, அந்தவேரியைச்சுற்றியிருக்கிறகரம்புநிலங்களிலே, முதல்வருஷத்திலேயெவனெவ்வளவுநிலஞ்சாகுபடிசெய்கிறானோ, அவ்வளவுநிலமும்வனுக்கேமானியமாக[3] விடப்படுமென்றும்; மறுவருஷமுதற்கொண்டுசாகுபடிபண்ணப்படும்பூமிக்கு, முதல்வருஷம்நாலத்தொருபங்குதீர்வையும்[4], அதற்குமேலேமூன்றுவருஷங்களிலேயந்தப்பூமிக்குக்கிரமமாய்முழுத்தீர்வையுங்கொடுக்கப்படவேணுமென்றும்; இந்தப்பிரகாரஞ்சாகுபடிசெய்யநிர்வாகமில்லாதவர்களுக்குவார்க்கம்[5] கொடுக்கப்படுமென்றும்; இப்படிக்கந்தக்குடிகளுக்குலாபமவர்த்தக்கச்சட்டங்களும்[6]திட்டங்களுஞ்செய்தான். பின்பந்தக்காடுகளிலிருந்ததுஷ்டமனுஷர்களெல்லாருமந்தப்படியந்தக்காடுகளையுங்கரம்புநிலங்களையும்நன்றாய்ச்சாகுபடிசெய்து, அதினாலேயதிகலாபம்பெற்றபடியால, தங்கள்திருட்டுத்தனத்தைவிட்டுநல்லகுடிகளானார்கள். அதினாலந்தத்திவானத்துக்கும்[7] வெகுபணங்கிடைத்தது; அந்தத்தேசத்திலுள்ளகுடிகளுஞ்சுகப்பட்டார்கள்.

௨௯-வது. கதை.

ஒருகிழப்பிராமணனுமவன்மகனுமொருவூருக்குப்பயணப்பட்டுப்போனார்கள். அந்தவழியிலேயொருதிரவியஸ்தன்[1] அவர்களுக்கொருகுதிரைதானமாகக்[2]கொடுத்தான். அந்தக்குதிரைமேலேயந்தக்கிழப்பிராமணனேறிக்கொண்டும், அவன்மகனடந்துகொண்டும், போய்க்கொண்டிருந்தபோது, அந்தவழியிலதைப்பார்த்தவர்கள், இந்தக்கிழவன்வெகுபொல்லாதவன், ஐயோவிந்தவழகுள்ளசிறுபிள்ளைவெய்யலிலேநடந்துவரும்படி, தான்குதிரைமேலேபோகலாமாவென்றவனைநிந்தித்தார்கள். அந்தக்கிழவனதைக்கேட்டு, தன்மகனையந்தக்குதிரையின்மேலேறிவரச்சொல்லி, தான்கால்நடையாய்ப்போனான். அதைப்பார்த்தவர்கள், இந்தப்பையன்மிகவுந்துஷ்டன், இந்தத்தள்ளாத[3] கிழவனைநடத்திக்கொண்டு, தான்மாத்திரமிந்தக்குதிரையின்மேல்ப்போகிறானே, இதுமகா[4] அக்கிரமம்[5] என்றுபேசிக்கொண்டார்கள். அதைக்கேட்டு, அந்தப்பையனுங்கீழேயிறங்கிவிட, அந்தவிருவரிலொருவருமந்தக்குதிரையின்மேலேறாமல், அதைச்சும்மாநடத்திக்கொண்டுபோனார்கள். இதைக்கண்டவர்களிவர்களென்னமுட்டாள்களாயிருக்கிறார்கள், இவர்களிருவரையுஞ்சுமக்கத்தக்கபலமுள்ளவொருகுதிரையைச்சும்மாநடத்திக்கொண்டு; தாங்களிந்தவெய்யலிலேவருந்திநடக்கிறார்களேயென்றுநிந்தித்தார்கள். அப்பாலவர்களிருவரும்படியேயதின்மேலேறிக்கொண்டுபோனார்கள். அப்போதவர்களைக்கண்டவர்கள், இவர்களைப்பார்த்தாலிந்தவிருவருமிந்தக்குதிரையைச்சுமக்கத்தக்கபலமுடையவர்களாயிருக்கிறார்கள். இந்தவாயில்லாதசீவன்மேலே யெவ்வளவும்பசியாதாபமில்லாதவர்களாய், இதின்பேரிலேறியிதைக்கொல்லுகிறார்களேயென்றார்கள். அந்தப்பிதாவும்புத்திரனுமுடனேயதினின்றுமிறங்கி, அதின்முன்னங்கால்களையும்பின்னங்கால்களையும்பலமானகயிறுகளாலேகட்டி, அதினாலுகாலின்சந்திலே[6] ஒருநுகத்தடியை[7] கொடுத்து, அந்தவிருவருமதைத்தூக்கிச்சுமந்துகொண்டுபோனார்கள். அப்போதவர்களைக்கண்டவர்கள், ஒய்சனங்களா[8] ஓடிவாருங்கள், இதோவொருவேடிக்கையைப்பாருங்கள்; ஒருகுதிரையானதுதானொருமனிதனைச்சுமக்கிறதைவிட்டு, இரண்டுமனிதர்தன்னைச்சுமக்கப்போய்க்கொண்டிருக்கிறதென்

[3] மானியம், வெகுமானம். [4] தீர்வை, வரி-பகுதி. [5] வார்க்கம், முன்பணம். [6] சட்டம், விதி. [7] திவானம், துரைத்தனம்.

[1] திரவியஸ்தன், பணக்காரன். [2] தானம், தருமத்துக்குக்கொடுத்தல். [3] தள்ளாத, பலவீனமான. [4] மகா, பெரிய. [5] அக்கிரமம், ஒழுங்கில்லாமை. [6] சந்து, இடுக்கு. [7] நுகத்தடி, வண்டிபெருதுக்கழுத்திற்பூட்டுந்தடி. [8] சனங்கள், மனிதர்கள்.

று, உரக்கக்கூபபிடடு, அவர்களைக்குறித்துநகைததார்கள்[9]. அபபோதநதவிருவரும்நதச்சனததிரளை[10] பார்த்து,அவர்களோடேகூடசசிரிததார்கள. அநதவேளையிலநதத்திரளிலொருவன,அநதககிழவனையுங குமாரனையுமபார்தது, ஓய் நலலவர்களே, நீஙகளசெய்தகாரியததிற்காகநாஙகளசிரிககிறோம், நீஙகளே னெஙகளைபபார்தது்ச்சிரிககிறீர்களென்றான. அதற்கநதககிழவன நாஙகளிநதவுலகததிலுளளவெலலா ருககுமெ, இஷ்டமபணணவேணுமெனறுநடநதும், ஒருவனுடையவிஷ்டமறறொருவனுககனிஷ்டமாயி ருககிறபடியினாலே[11] நாஙகளயாருககும்இஷ்டமபணணினதிலலையெனறுசிரிககிறோமென்றான்.

உஎவஅ. கதை.

ஒதூறகுதேசத்திலேமுனகாலத்திலே துரைத்தனமபணணிககொணடிருநதசேதுபதியெனறவர், தெய்வவிசுவாசமுளளவராயிருநதபடியினாலே, அஙகேயிருககிறராமலிஙகமெனகிறசுவாமிக்கு,ஒருபெரியகோயிலுணடாககி,அதற்குச்சவம்[1] முதலாகியதருமஙகளிலேதமமுடையதிரவியஙகளையெ லலாஞசெலவுபணணிககொணடிருநதார். அநதத்தேவஸ்தானத்தைச்[2] சேவிததவர்களுககு[3], அவர்களா லேசெய்யபபட்டபாவஙகளெலலாம்போய், அவர்களுககுமிகுநதபுணணியஙகளுணடாகுமெனறு, அந் தஸ்தலபுராணத்திலேசொலலியிருககிறபடியினாலே; அபபோதநதக்கோயிலுககுவெகுமனிதர்கள போய்க்கொணடிருநதார்கள. அவர்களநதவழியிலிருககிறவொருபெரியநதியைக்கடககவருந்தினதை, அநதசசேதுபதியறிநது; அவர்களவருததமிலலாமலதைக்கடநதுபோகுமபடியா, தமமுடையசெ குபணததினாலேவிலதார்மோடஙகளும, அதுகளுககுமனிதர்களையுமவைதது, அவர்களுககுதவிசெய துகொணடிருநதார். மேலுமவர்நதவுதவிபணணுகிறகாரியததைநனறுவிசாரிததுநடததுமபடி,தமககு நமபிக்கையுளளதமமுடையமருமகனைவிசாரணைகர்ததனாயஙகேவைததிருநதார். அவனதைவிசாரிததுக கொணடிருநதபோது, மனுஷர்களதிகமாகவநததைபபார்த்து; இவர்களிலாளுக்கு[4] ஒருகாசுதீர்வை வாஙகினாலும, அனறாடமவெகுபணஞசேருமெனறு, அநதசசேதுபதியுடனேசொனனான. அவர் தைத்தமமுடையமனதிலேவைததுககொணடு, தம்வீட்டுககுவநது, அவனுடையபெண்சாதியாகிய தமமுடையகுமாரததிகளிருவரையுநதமமிடததுககழைபபிதது; மககளா, நானபணணுகிறதருமததுக குவிகாதம[5] பணணநினைககிறவனை நானெனனசெயயவேணுமெனறவர்களைககேட்டார். அவர்களதற கவனைவெட்டியெறியவேணுமெனறுததீர்வுகொடுததார்கள. அபபுறமவர்வர்களைதஙகளநதபபுர ததுககுடனேபோகசசொலலி, தமமுடையமருமகனையநதபபடிவெட்டியெறியுமபடியாத்தீர்மானஞ செயதார். அதையவனபெண்சாதிகளாகியமேறசொனனவநதகுமாரததிகளிருவருஙகேள்விபபட்டு, மகாவிசனததுடனேதஙகளதகபபனாராகியசேதுபதியிடததிறகுவநது, ஐயா, நாஙகளெஙகளுடைய வொருமனுவைககேட்டுநடபபிககவேணுமெனறார்கள. அநதசசேதுபதிநீஙகளுஙகளபுருஷனைககுறித துயாதொருமனுவுமெனனைககேட்டுககொளளாமல, வேறேயெநதககாரியமெனனைககேட்டாலும், நா னபபடியேயுஙகளுககாகவதைநடபபிபபேனெனறார். அவர்களதபபடியானால, நாஙகளெஙகளபுருஷ னுடனேகூடவுடனகட்டை[6] யேறுமபடியெஙகளுககுததாஙகளதயவுபணணியுததர்வுகொடுககவேணுமெ னறார்கள. அவர்தறகுச்சநதோஷிததுடனேநிர்த்தாக்ஷிணணியமா[7] அவர்களுககுததர்வுகொடுததுவிட டார்.

9. நகைககிறது, சிரிககிறது. 10 திரள, கூட்டம். 11 அனிஷ்டம, இஷ்டமிலலாமை.

1 உச்சவம், திருநாள். 2 தேவஸ்தானம், கோயில். 3 சேவிககிறது, தெரிசிக்கிறது. 4 ஆள், தனித்தனிமனிதன். 5 விகாதம், விரோதம். 6 உடன்கட்டை, சககமனம். 7 நிர்த்தாக்ஷிணணியமா, தாக்ஷிணணியமிலலாமல்.

௨௮வது. கதை.

தெற்கே மதுரைத் தேசத்தின் பெரிய துரைத்தனத்துக்குக் கீழ்ப்பட்டு, அதற்குப் பகுதி கட்டிக்கொண்டிருந்தவரும், ராமநாதபுரத்தைச் சேர்ந்த தேசத்தின் துரைத்தனத்துக்குடையவரும், ஆகிய ரகுநாதசேதுபதியென்றவர், மிகவும் புத்தியும் நீதியுந் தைரியமுமுள்ளவராயிருந்தார்; மேலுமவர் தம் தேசமானுக்கு நற்குணமும் நற்செய்கையுமுள்ளவொரு பிள்ளை போலிருந்ததுமல்லாமல், சில வேளைகளில் தங்களுக்குள்ளே கூட்டங் கூடிக்கொண்டு, அந்தப் பெரிய துரைத்தனத்திற்கு விரோதிகளாய், அதற்கிறைப்பணஞ் செலுத்தாமலும், அந்த மதுரைத் தேசத்தினூர்களின் மேல் விழுந்ததுகளைக் கொள்ளையிட்டுக்கொண்டும், இப்படிக்குத் துர்மார்க்கர்களாயிருந்த சில பாளையக்காறர்களைப் பிடித்துப் பலமான தெண்டனை செய்து, தம் தேசமானதைச் சந்தோஷிப்பித்துக்கொண்டும், இவ்விதமாய் வெகு வருஷங்கள் துரைத்தனஞ் செய்துகொண்டிருந்து, நல்ல சனங்களெல்லாம் விசனப்படும்படியா யிறந்துபோனார். அவருக்குப் பின்பவர் துரைத்தனத்தைப் பரிக்கிறதற்கு[1] அவருக்குப் பிள்ளையில்லாமையினால், அவர் பந்துக்களிலொருவனாகிய கட்டைத்தேவனென்றவன், அந்தக் குடும்பத்திற் பிரவேசித்து, அந்தத் துரைத்தனத்தைச் செய்துகொண்டிருந்தான். இறந்துபோன ரகுநாதசேதுபதிக்குறவான மற்றொருவன், தன் பலத்தினாலவனிடத்திருந்த ராசியபாரத்தைப் பிடுங்கிக்கொண்டவனைத் துரத்திவிட்டான்[2]. அந்தத் துரத்தப்பட்டவனுக்கும் முன்னிறந்துபோனவனுக்கும், பகுதிகொடுத்துக்கொண்டு, கொஞ்சத் தேசந் துரைத்தனஞ் செய்துகொண்டிருந்த தொண்டைமானென்றவனும், ரகுநாதசேதுபதியின் சேனாதிபதிகளிலொருவனாகிய சிவர்ணவுடையார்த்தேவனென்றவனும், அந்தக் காலத்தில் மிகவுஞ் சமர்த்தராயிருந்தபடியால், அவர்களிடத்தில் அடைக்கலம் புகுந்த கட்டைத்தேவனுக்கவர்களுதவி செய்யச் சம்மதித்தார்கள். அதினாலவர்களிருவருமொரு தருணத்தில், ஒரு பெரிய தண்டு சேர்த்துக்கொண்டு, அந்த ராமநாதபுரத்தைச் சூழ்ந்துகொண்டு[3], பலமான சண்டை செய்து, அங்கிருந்து துரைத்தனஞ் செய்த வத்துஷ்டமனுஷனைச் செயித்து, கட்டைத்தேவனுக்கந்த ராசியத்தை ஸ்தாபித்தார்கள். பின்பு கட்டைத்தேவன், இவர்கள் தனக்கு மிகுந்த சகாயஞ் செய்தபடியால், அந்தத் தொண்டைமான் தனக்குப் பகுதி செலுத்தாமல், அவன் தேசத்தை யவனுக்குச் சாகீராகக் கொடுத்துவிட்டான். அப்பாலந்தச் சேனாதிபதியாகிய சிவர்ணவுடையார்த்தேவனுக்கு, தன் குமாரத்தியைக் கலியாணஞ் செய்யக் கொடுத்ததால், தன் ராசியத்திலஞ்சிலிரண்டு பங்கவனுக்குக் கொடுத்து, தனக்கவன் பகுதி கட்டிக்கொண்டு, அந்தப் பாகத்தை[4] அனுபோகித்துக்கொள்ளும்படியாய்த் திட்டம் பண்ணினான். அந்த ராசியத்தை மேற்சொல்லியபடி பங்கிட்ட போது, அதுகளில் நீர்வளமுள்ள செழும்பான பூமிகளை யந்தத்தம்பதிகள் தங்கள் தந்திரத்தினால் தங்களிரண்டு பங்குகளில் விழும்படியாய்ப் பண்ணிச் சேர்த்துக்கொண்டார்கள். அதினாலதினதிகாரிக்கதிக லாபமுண்டாகிறது. அந்தப் பாகந்தான் சிவகங்கைச் சீமையென்று சொல்லப்பட்டிருக்கிறது.

[1] பரிக்கிறது, சுமக்கிறது. [2] துரத்துகிறது, ஓட்டுகிறது. [3] சூழுகிறது, வளைக்கிறது. [4] பாகம், பங்கு.

௫௪-வது. கதை.

துரியோதனனென்றவன், தன்சிறியதகப்பனாகிய பாண்டுமகாராசாவின்குமாரர்கள் தர்மராசன்முதலாகிய பாண்டவர்களைந்துபேர்களையும், அவர்கள் நகரமாகிய இந்திரப்பிரஸ்தத்திலிருந்து தன்பட்டணமாகிய அஸ்தினாபுரத்துக்குத் தந்திரமாயழைப்பித்து, கபடமான சூதாட்டத்தினாலவர்களுடைய ராச்சியத்தையவர்களிடத்தினின்று மபகரித்துக்கொண்டு, அவர்கள் பன்னிரண்டுவருஷத்துக்கு வனவாசம்[1] பண்ணவும், ஒருவருஷத்துக்கு அஞ்ஞாதவாசம்[2] பண்ணவும், அவர்களையுடன்படுத்திக் காட்டிலனுப்பிவிட்டான். அவர்கள் சத்தியந்தப்பாதவர்களாகையினால், அந்தப்படியே சிலகாடுகளிற்போய்க் கஷ்டத்தோடு காலங்கழித்துக் கொண்டிருக்கையில், துஷ்டனான துரியோதனனவர்கள் காட்டிலே வருத்தப்பட்டுக்கொண்டிருந்ததை யறிந்திருந்தும், அவர்களுக்குமுன்னே தன்சம்பத்தைக்காட்டி யவர்களை வெட்கப்படுத்தவேணுமென்று நினைத்து, தனது மந்திரிகள்முதலான சைனியங்களோடு[3] வேட்டையாடப்புறப்பட்டவர்களிருந்த காட்டுக்கு வந்து, அவர்கள் பார்க்கத்தக்க சமீபத்திலிருந்த மிகவும் மலங்காரமானவொரு தோப்பில்த் தன்கூடாரங்களையடிப்பித்து, அங்கேயிறங்கி, நாட்டியம் வாத்தியமுதலானவைகளாற் சந்தோஷமனுபோகித்துக்கொண்டிருந்தான். அப்படியிருக்கையிலந்தக்காட்டுக்குடையவனாகிய சித்திரசேனனென்றவொரு கந்தர்வனங்கே வந்தவர்களைக் கண்டு, என்னுடைய சோலையிலென்னனுமதியில்லாமலிங்கே வந்திறங்கியிருக்கலாமாவென்று, தன்மனிதர்களைக்கொண்டவர்களைக் கேட்பித்தான். அதற்கு துரியோதனன் தாழ்ந்த[4] தக்க உத்தரவு சொல்லாமையினாலேயந்தக்கெந்தர்வன், தன் சேவகர்களுக்குத்தரவு கொடுத்தானவர்களுடைய கூடாரங்கள் முதலானவைகளைப்பிடுங்கியெறிந்தவர்களைத் துரத்திவிடச்சொல்லி. அதினாலவர்களுக்குமிவர்களுக்கும் பெரியவுயுத்தமுண்டாகி, இருதிறவரிலும்[5] வெகுசேனைகளிறந்துபோய், கடைசியில்ச் சித்திரசேனன் துரியோதனனைப்பிடித்துத் தன்தேரிற்கட்டிக்கொண்டுபோனான். அதைப்பாண்டவர்களிலேமூத்தவனான தர்மராசன் பார்த்து, அந்தத் துரியோதனன்மேலவனுக்கனுக்கிரகம்[6] வந்து, தன்தம்பிகளிலொருவனாகிய அர்ச்சுனனையழைத்து, தம்பீ, அந்தக்கந்தர்வனிலநின்று துரியோதனனாகிய நம்முடைய ஞாதியை விடுவித்துவாவென்று சொல்ல; அதற்கர்ச்சுனன், அண்ணா, நமக்கபகாரியாகிய துரியோதனனையந்தக்கந்தர்வன் பிடித்துக்கொண்டுபோனால் நாமதைக்குறித்துச் சந்தோஷப்படவேணுமாவென்றான். அப்போது தர்மராசன், தம்பீ, ஒருசாதியாரிலொருவனோடொருவன் விரோதமாயிருந்தாலும், அன்னியசாதியாராலந்தவொருவனுக்கொரு கெடுதி நேரிடுமாகில், அவனுக்கு மற்றவன் வேண்டியசகாயஞ்செய்து, அக்கெடுதியினின்று மவனைமீட்க[7] வேணும், அதற்கந்தச்சாதியாரெல்லாமுடன்படவேணும், அப்படிச்செய்யாவிட்டாலந்தச்சாதிக்கபகீர்த்தியுங் கெடுதியும் வரும்; அல்லாமலுமொருவன் நமக்குத்தீங்குசெய்தால், அதற்குக்கைமாறு நாம் நன்மையிலேயேயவனுக்குச்செய்துகாட்டவேணும், ஏனென்னில் அதினாலே பகவானுக்குத் திருத்தியாகிறதுமல்லாமலுலகரும் நம்மைக்கீர்த்திப்பார்கள், எதிரிக்கும் மிகுந்த நாணம்[8] உண்டாகும். இந்தப்பூமியை நாம்வெட்டினாலுந்தோண்டினாலுங் கெல்லினாலுமுழுதாலுமது நமக்குப்பதில் நல்லபலனையே கொடுக்கிறதை நாம் மறந்துவிடலாகாது, ஆதலாற் சீக்கிரத்தினீ போயவனைமீட்கவென்ன; அர்ச்சுனனப்படியே யந்தக்கெந்தர்வனண்டைபோய், துரியோதனனைத் தன்னண்டையொப்பிக்கச்சொல்லியவனைக் கேட்க; அவனது செய்யமாட்டேனென்றதால், அர்ச்சுனன் சித்திரசேனனோடெதிர்த்துச்சண்டைசெய்தவனைச்செயித்துத் துரியோதனனை விடுவித்து, தன்னண்டையவனைக்கொண்டுவந்துவிட; அவனவனுக்குச்சிலமரியாதைபண்ணியவனையனுப்பிவிட்டான். அப்போது துரியோதனன் நன்றியறியாத

[1] வனவாசம், காட்டிலிருப்பு. [2] அஞ்ஞாதவாசம், மறைந்திருப்பு. [3] சைனியம், சேனை. [4] தாழ்கிறது, பணிகிறது. [5] திறவர், கட்சிக்காரர். [6] அனுக்கிரகம், கிருபை. [7] மீட்கிறது, திருப்புகிறது, ரட்சிக்கிறது. [8] நாணம், வெட்கம்.

வருயதற்குச்சநதோஷியாமல, தனனுற்செயிககபபடாதவனைததனபகைவனுகியவர்ச்சுனன்செயிததா னேயெனகிறபொருமையுள்ளவனுய், எபபடியாகிலுமிநதபபாணடவர்களைச்சிககிரததிலேநாங்கொலல வேணுமெனகிறமனதுடனேயேதனபட்டணததுககுததிருமபியபோய்ச்சேர்ந்தான்.

இருவது. கதை.

ஏரியிலலாமற்பட்டடையிலிறைததுபபயிரிடுகிறவொரு கிராமததிலோரேழைககுடியானவன், தன் செயிலேயாறுதளை[1] உழுதுபயிரிட; அதுவிளைநதகாலததிலதைத்தொகமபார்க்கததிவாணததாரா லே[2]அனுப்பபபடடசுப்பய்யனென்றவொருகாரியககாரனநதவூருககுவநதுசேர்ந்து, அநதக்குடிததனக காரனைக்கூபபிடடு, நாம்நாளைககுன்விளைச்சலைத்தொகமபோடவநதிருககிறேம்; நமமுடையபெண்சா திகெற்பமாயிருககிறபடியினுல, அவளுககொருபடியச்சம்[3] பசுவின்நெய்வேணும், அதுசேகரிததுநம முடையசாலைக்கனுபபெனறுன். அதுக்கநதக்குடியானவன், ஐயா, எனககிருககிறதொரேயோர், அதற் கிருககிறவிரணடுகுணடைகள்[4] தவிர்வேறேயெனனிடததிலே பசுமாடுசுத்தமாயிலலையென்றவனுககுச் சொனனுன். அபபோதநதத்தொகக்காரனதைத்தனமனதிலேவைததுககொணடு, அவனபயிரிட்டிருநத நிலததைபபெருககியளநதுகொணடு, அதுநிசமாக்காணததக்கதானியததுககாதிலுமதிகமாகததொகம போடடுககொணடுபோய்விடடான். பின்பநதக்குடியானவனபபோதுதாசிலபணணிககொணடிருநத நாசிவகாராயனிடததிலேபோயதைப்பறறிச்சொலலிககொணடான. அவனநலலதாகடடு, அவனையிஙகே யழைபபிததிதைக்குறிததுவிசாரிததுத்தெணடிபபோம்; நாளையதினம்நமமாமுடையாளுககு[5] சீமநத கலியாணம்[6] நடககபபோகிறபடியினுலே, நீயினறைககுததானே, இருகலபபசசரிசிசேகரிததுககொண டுவாபோவெனறுன. அபபுறமநதககுடிததனககாரனிநதவநீதஙகளைககுறிததது, அநதவறமனைசசிரஸதா பகவநதராயனிடததிலேபோய்முறையிடடு; சுவாமீ, நாஞெவிரணடு குணடைகளைவைததுககொணடு பயிரிடுகிறவொரேர்க்குடிததனககாரன், எனனைததாஙகளமேற்படியார்கள்நீதத்திலநினறுககாபபாறற வேணுமெனறுசொலலியவனகாலிலேவிழுநதழுதான. அநதசசிரஸதா, நலலது, நீபயபபடாதே, எழுநதிரு, எவவளவுமிரககமிலலாமலுனககிததனைபொலலாஙகுசெயதவநதத்தொகக்காரனையுமநதத் தாசில்தாரனையுமுனகணமுனனையேதளளிபபோடடுனனைககாபபாற்றுவோம்; இநதமூ ம வ இலே நம்முடையகுமாரனுககுநடக்கப்போகிறதிருககலியாணததிலே, அநதக்கலியாணபபெண்தரிககத்தக்க தாகவொருபடடுககூறையும[7], மாபபிளைககொருசோடுபடடஞ்சுசோமனுஙகொணடுவா, சீககிரமாபபோ வெனறுன. அநதககுடியானவன், ஐயா, நானொவொருபடிபசுவினநெய்க்கும், இருகலபபசசரிசிககும கெதியறறவெளியவன, பததுவராகனபெறததககபடடுவஸதிரஙகளபெறமாடடேனேயெனறுன். அநத சிரஸததாரன, அடேநீரணடுகுணடைகளபெறுமானவனென்றுமுனனேசொனனையோயிலலையோவெ னறுன. அவன, ஐயா, அதுணடு; ஆனுலதுகளபடுததாலிரணடுபேர்தூக்கியெழுபபததககசபபைக குணடைகள; அதுகளையுமவிற்றுமககுக்கொடுததுவிடடாலபபாலநானென்னமாய்ப்பிழைப்பேன்; அலலவெனறதுகளை நானவிற்கத்தான்புறப்படடாலும, யாருமதுகளைவிலைக்குவாஙகமாடடார்களே, நா னென்னசெய்வேனென்றுன். அநதசசிரஸதாவதப்படியானுல, உன்பெண்சாதிகழுததிலேதாலியாவது[8] இலலையோடாவென்றுன். அதற்கவன, ஐயா, எனபெண்சாதிமுனனேகடடிக்கொணடிருநதபொன் தாலியை, தஙகளுக்குமுனனேயிநதக்கசசேரியிலேசிரஸதாவாயிருந்தபவானிராயருக்காகவிற்றழுதுவிட டேன, இபபோதெனபெண்டாடடிமாரததாலிதானகடடிக்கொண்டிருக்கிறுளென்றுன. அநதசசிரஸதா

[1] தளை, ஒவவொருகழனி. [2] திவாணத்தார், துரைததனததார். [3] அசசம, கலபபிலலாத. [4] குணடை, எருது. [5] ஆமுடையாள, பெண்டாடடி. [6] சீமநதகலியாணம, கெர்ப்பமாயிருககையிலசெயகிறவொருசடஙகு. [7] கூறை, பிடவை. [8] தாலி, கலியாணககுறி.

வானாலதுவென்னமர்த்திலேசெய்ததென்ன; அவனதுவன்மர்த்திலேயென்ன; அந்தச்சிர்ஷ்தாவதப்படியானாலந்தவன்மர்த்தூவியையாவதிங்கேகொண்டுவந்துகொடு, நம்முடையபாதகுறட்டு[9] குமிழுக்காவது[10] நந்தமபோல்வைத்துக்கொள்ளவுந்தவுமென்றான். அந்தவெளியவன, ஐயா, அதற்குமிபபோதனபெண்சாதிதன்தாயார்வீட்டுக்குப்போயிருக்கிறாள்; அதுவிருபதினகாதவழியிலேயிருக்கிறதுசாமியென்றான. அபபோதந்தசசிர்ஷ்தா, நாம்மாமூலத்துவேலையினவழக்கப்படிக்கிவ்விடத்திலேதாவது வாஙகவேணுமென்றுபாடுபட்டால, இவனைப்படியாவதுநமக்கேதுங்கொடாமற்றனகாரியத்தைச்சாதித்துக்கொண்டுபோக[11] பாடுபடுகிறானென்று, அவனபேரிலேகோபித்துக்கொண்டு; அடேமுட்டாளே, அரமனையிலேமுறையிடவருகிறநீ, பத்துவராகனாவதுனகையிலேகொண்டுவர்த்தேவையிலலையா; இவவளவுக்குதிர்வாகமிலலாதவொருபஞ்சைக்கு[12] இவிடத்திலேபிராதொனறோ; அதிங்கேசெலலாது, போபோவென்றுசொலலிச்சிலசேவகரைவிட்டவனைப்பிடரியைப்பிடித்துததடித்தள்ளிவிட்டான.

௨௰௪. கதை.

நூறுநாற்பதுவருஷங்களுக்குமுனனே, புலவினர்சாட்சியைச்சேர்நதசேனாபதிகளிலொருவனாகியஎகோசியெனறவன, சிலசேனைகளோடேகூடப்புறப்பட்டு, தெனதேசத்திலராமேசுரமெனகிறதெய்வஸ்தலத்தை[1]குறித்துயாத்திரையாகச்சோழமணடலமெனகிறதேசத்தினமார்க்கமாகவநதான. அவனபுனவைவிட்டதுமுதல, ...ர்வர்வவனபார்த்ததேசஙகளிலேசோழமண்டலமபோலநீர்வளமுமபயிர்வளமுமநிலபுஷ்டியுமதேவால...க்ளுமுளளதேசஙகளையவனகாணாமையினாலே, இதுநலலதேசம, இபபடிபபட்டதுநமக்குக்கிடைத்தால்நலலதெனறொருவாசையவனுக்குளளேயுண்டாயிறறு. அதினாலேசோழமணடலத்துக்கதிகாரியைக்குறிநதவனவிசாரிக்கையில, அதறகுச்சரியாயவனகேளவிப்பட்டான, தஞ்சாவூரிறறானாததனமபணணிக்கொணடிருக்கிறவிசயராகவநாயகனெனறவன, தனராசசியவிசாரணையிறறனகியாபகத்தைவையாமலும, பிராமணர்களிடத்திலேமிகுநதவிசுவாசமாயவர்களசொனனபிரகாரநதெய்வாராதனம்[2]பணணிக்கொணடுமே, வெளகீஷ்டனாயிருக்கிறானெனறு. அபபாறறானகேளவிப்பட்டபிரகாரமனுபோகப்பட்டதறகுமேல, தானசெயயததக்கதைச்செயயவேணுமெனறுதனக்குளளேயோசித்துக்கொண்டு, அதறகாகததனக்குடமபுகுணமிலலையெனறுபிததலாட்டமபணணிக்கொணடுதஞ்சாவூர்க்கடுத்தகுமபகோணமெனகிறபட்டணததிறசிலமாசஙகள வாசமபணணிக்கொணடிருநதான. பினபவனமுனனடிகேளவிப்பட்டபடிக்கநதத்துரைததனஙகிரமமிலலாமலிருபபதைக்கணடறிநது, ஒருநாள்த்தனனுடனவந்திருந்தகொஞ்சச்சேனையோடேபுறப்பட்டுததஞ்சாவூர்க்கோட்டையினசமீபத்திலவந்தான. அபபோதுவிசயராகவநாயகனதெய்வபூசைபணணிக்கொணடிருநதபடியினால, அநதசமாசசாரமவனுக்குச்சொலலவதுசமயமலலவெனறு, அவனுடையவேகாட்கள்[3] அவனுக்கதையறிவிக்காமலேயிருநதுவிட்டார்கள. அபபடியிருக்கையில, எகோசியநதக்கோட்டைக்குளளேதனசேனையுடனேபிரவேசித்தபோது, அநததாயகனுடையமநதிரிமுதலாகியபேர்பபநதோடிபபோய், பூசைபணணிக்கொணடிருநதவிசையராகவநாயகனுடனே, இதோநமமுடையகோட்டைக்குளளேஎகோசிதனசேனையுடனேபிரவேசித்துவிட்டான, இக்கோட்டைக்குமோசமவநததேயெனறார்கள. அபபோதுவிசயராகவநாயகன் எகோசியிநதக்கோட்டைக்குளளேவநதாலுமநமக்குபபயமெனனவிருக்கிறதெனறுசிரித்து, தானபூசைபணணிக்கொணடிருநதவிக்கிரகததின முனனேயிருநத துளசிதீர்த்தத்தை, அதினபாத்திரத்துடனேயெடுத்தவர்களகையிலேகொடுத்து, இதை நீஙகளகொணடுபோய், எகோசியுமவனசேனையும வருகிற

[9] பாதகுறடு, மிதியடி. [10] குமிழ், சொசம. [11] சாதிக்கிறது, அனுகூலப்படுத்துகிறது. [12] பஞ்சை, ஏழை.
[1] ஸ்தலம, இடம. [2] தெய்வாராதனம, தேவபூசை. [3] வேகாட்கள, வேருக்காரர்கள.

வழியிலிறையுங்கள்[4], அதின்மேற்றங்கள்காலைவைத்து நடக்கிறவர்களுக்குடனே கண்கெட்டுப்போமென்றவர்களுக்குச்சொல்லியனுப்பினான். அப்படியேயவர்கள் நந்தீர்த்தத்தையவர்கள் வருகிறவழியிலே தெளித்துக்கொண்டிருந்தார்கள்; ஏகோசிதன் சேனையோட்டதைச்சட்டை[5] பண்ணாமல் நந்தகோட்டைக்குள்ளே பிரவேசித்துக்கொண்டிருந்தான். அதைமறுபடியும் நந்தநாயகனுடனே வேவுகாரர்கள்போய்ச்சொல்ல; அவன் நந்தவிக்கிரகத்தண்டையிலிருந்த துளசித்தளங்களை வாரியவர்கள்கையிற்கொடுக்க; அவர்களதுகளையுங்கொண்டுபோய் அவர்கள்வருகிறவழியிற்கொட்ட; அதுகளையுமவன் சட்டைசெய்யாமல் மிதித்துக்கொண்டுபோய், உட்கோட்டைக்குள்ளேபிரவேசித்து, அந்தக்கோட்டையைத்தன் வசப்படுத்திக்கொண்டு, விசயராகவநாயகனைப்பிடிக்கவவன்றமனையினந்தப்புரத்திற்பிரவேசித்ததையவனறிந்து, உடனே தன்பட்டாவையும்[6] கேடகத்தையும்[7] எடுத்துக்கொண்டு, அப்படையில்விழுந்துவெகுபேரைவெட்டி, கடைசியில்த்தானுமவர்களாலேவெட்டுண்டுவிழுந்தான். அதுமுதலிதுவரைக்குந்தஞ்சாவூரிலேகோசியின்சந்ததியார் துரைத்தனஞ்செய்துகொண்டிருக்கிறார்கள்.

௰௭வது. கதை.

விந்தியபர்வதத்தின்மீதொருவடவிருக்ஷத்தின்[1] பொந்தில், இரண்டுகிளிப்பிள்ளைகள் தம்பதியாய்[2] கூடுகட்டிக்கொண்டதிலிரண்டுமுட்டையிட்டு, அவ்வயங்காத்து[3], குஞ்சுபொரித்திருக்கையில், அச்சிறிசுகளுக்குப்பறக்கும்பருவமவருமுன்னே, ஒருநாளோரிரக்கமில்லாதவேடன், பக்ஷிகளைப்பிடித்தூர்தோறுங்கொண்டுபோய்விற்றதினாற்சீவனம்பண்ணுகிறவன், அம்மரத்திலேறியப்பொந்திற்கையிட்டு, அக்கூட்டைப்பரிசோதித்து, அக்குஞ்சுகளிரண்டையுமெடுத்துக்கொண்டு, ஒரூரிற்சென்றோர்குடியானவனிடத்தோர்குஞ்சுவிற்றான்; மற்றொன்றைத்தனக்கிருந்தவரியசிறியவொருபிள்ளைவிளையாடும்பொருட்டுத்தானேவைத்துக்கொண்டுவளர்த்தான். அக்குடியானவன்தான்வாங்கினகுஞ்சுக்கோர் நல்லகூடுகட்டியதிலதைவைத்து, அதற்குப்பாற்சோறுந்தயிர்ச்சாதமுங்கோவைக்கனியுங்கொய்யாப்பழமுங்கதலிப்பழமுமிவைமுதலாகியவற்றைக்கொடுத்து, அதைவளர்த்துக்கொண்டுவருங்காலத்தற்குத்தன்பாஷையைக்கற்பித்தான். அதற்கப்பாஷைவந்தபிறகு, விருந்தோம்பல்[4] ஒழுக்கமுடைமை[5] அடக்கமுடைமை[6] பொறையுடைமை[7] நடுவுநிலைமை[8] இன்சொல்[9] இவைமுதலானவைகளைப்பற்றி, அவ்வீட்டிலுள்ளோரிடைவிடாமற்சம்பாஷித்தலால், அவற்றையுமதுகற்றுக்கொண்டது. அவ்வேடன்வளர்த்ததோவென்றால், அவன்றினம்பண்ணுங்களையுந்தின்னக்கற்றதுமல்லாமல், அவன்வீட்டிலுள்ளோர்பேசுங்கொச்சைமொழிகளை[10] கற்றபிறகு, அவரவர்கள்பேசிக்கொண்டகொலைகளவுகட்காமம்பொய்சூதுவாதுகள்முதலாகியவற்றையுங்கற்றுக்கொண்டது. இப்படியிருக்கவக்குடியானவன்சிலவருஷங்கள்சென்றிறந்தமையால், அதையாதரிப்பாரில்லாமல், அதுபழையபடியோர்காட்டிற்போய்ச்சேர்ந்து, ஓராலமரத்தில்வாசஞ்செய்துகொண்டிருந்தது. மற்றதுமப்படியேயதைவளர்த்தவன்மரித்தமையால்[11] அதைப்போஷிப்பாரின்றி, அவ்வடவியிற்றனே போய்வேறோர்மரத்தின்மீதிறங்கியிருந்தது. அக்காலத்திலொருநாட்பகலிலொருயாத்திராவாசி, புண்ணியதீர்த்தங்களாடித்திவ்வியதேசசஞ்சாரியாயிருக்கிறவன், வழிநடையால்வெயர்த்தலுத்து, அக்கிளிகளிற்பின்னையதிருந்தமரத்தினிழலிற்போய், அங்கேதன்படுக்கையைப்போட்டு, அதின்பேரிற்படுத்துக்கொண்டிருந்தான். அப்பொழுதக்கிளியவனைக்கண்டு, இதோவொருமனிதன்வந்தான், இவனிடத்திலுள்ள

[4] இறைக்கிறது, சிந்துகிறது, தெளிக்கிறது. [5] சட்டை, மரியாதை. [6] பட்டா, கத்தி. [7] கேடகம், பரிசை.

[1] வடவிருக்ஷம், ஆலமரம். [2] தம்பதி, ஸ்திரிபுருஷர். [3] அவயங்காக்கிறது, அடைகிடக்கிறது. [4] விருந்தோம்பல், விருந்தாடிகளைப்போஷித்தல். [5] ஒழுக்கமுடைமை, சீலமுடைமை. [6] அடக்கமுடைமை, அடங்கியிருத்தல். [7] பொறையுடைமை, பொறுமையாயிருத்தல். [8] நடுவுநிலைமை, பக்ஷபாதமில்லாமை. [9] இன்சொல், மதுரமொழி. [10] கொச்சைமொழி, நிர்மரியாதைமொழி. [11] மரிக்கிறது, சாகிறது.

டை முடிச்சுகள் செம்பு தவலைகள் பணங் காசுகளிருக்கிறதுகள்; வில்லம்புகத்திகட்டாரிகளை யெடுத்துக் கொண்டு துரையாவாருங்கள், இவனைக்காலையொடியுங்கள், கழுத்தைமுறியுங்கள், கண்ணைப்பிடுங்குங் கென்றது. இதைக்கேட்டவம்மனிதன் திடுக்கிட்டேதோவிதுசில கள்ளர்களுக்குறவாயிருக்கிற பட்சியைப் போலக்காண்கிறது, ஆகையாலிவ்விடத்திலிருந்தானமக்கபாயம்வருமென்றெண்ணி, திடுமென்றெழுந் துபோய், அம்முனியைதிருந்தமார்த்தின்கீழ்த்தன்படுக்கையைப்போட்டுத்திறப்படுத்திருந்தான். அப்பொ ழுதக்கிளியவனைக்கண்டு, இதோவோர்விருந்தாடி வருந்திவந்திருக்கிறார்; இவருக்குக்கால்லம்பச்சலங் கொடுங்கள், உட்காரவாசனங்கொடுங்கள், ஆயாசந்தீர்விசிறுங்கள், தாகந்தீர நீர்மோர்கொடுங்கள், பசிதீர வன்னமிடுங்கள், மற்றுமுள்ளவுபசாரணைகளையுஞ்செய்யுங்களென்றுசொல்லிற்று. இதைக்கேட்டவந்த யாத்திரவாசிமிகவுமாச்சரியப்பட்டுக்கொண்டிருக்கையில், அதுவழியாலோர்சந்நியாசிவந்தான்; அவ னோடிந்தவர்த்தமானத்தைப்பவன்சொல்லி, இதுகளின்வயனமென்னென்றுகேட்க; அதற்கவனிக்கிளி சற்சனசகவாசம்பண்ணினது, அக்கிளி துர்ச்சனசகவாசம்பண்ணினதென்றுசொல்லிப்போய்விட்டான்.

௰௮வது. கதை.

வடதேசத்திலிராச்சியாதிகாரம்பண்ணிக்கொண்டிருந்தவொருபெரியவர்சன், ஏழைகளமுதலான வர்களுக்கெப்போதுமுபகாரம்பண்ணிக்கொண்டிருந்தான். அப்படியிருக்கையிலவனுடையதே சத்திற்குடியிருந்தவொருபெரியவர்த்தகன்தாழ்மையும்[1] நல்லவார்த்தையுமுள்ளவனும், எளியவர்களுக்கும் படித்தவர்களுக்குந்தன்னாற்கூடுமான சகாயம்பணமுதலியவற்றைச்செய்துகொண்டிருந்தான். அப்போ தந்தத்தேசத்தின்மனுஷர்களெல்லாவொருவேளையவவர்சனைப்புகழ்ந்துபேசிக்கொண்டிருந்ததைக்காட் டிலும், இவ்வர்த்தகனையெப்போதுமதிகமாகப்புகழ்ந்துபேசிக்கொண்டிருந்தார்கள். அவ்வர்சனிதைக் கேள்விப்பட்டு, நமக்குவந்ததைப்பார்க்கிலுநம்முடையதேசத்துச்சனங்களிலொருவனுகியவொருவர்த் தகனுக்குப்பெரியகீர்த்திவரலாமாவென்றவன்பேரிற்பொறாமைப்பட்டு, எப்படியாவதவனைக்கொல்லவே ணுமென்றுதீர்மானித்து, பின்புதனக்குநம்பிக்கையானவொருகாரியக்காரனையழைப்பித்து, நீபோயவ் வர்த்தகன்றலையைவெட்டிக்கொண்டுவந்தெனக்குக்காண்பித்தால், உனக்குநல்லவெகுமானங்கொடுப் பேனென்றிரகசியமாகச்சொல்லியனுப்பினான். அந்தக்காரியக்காரனதற்காகப்பிரயாணப்பட்டு[2] நடந்து கொண்டிருக்கையில், ஒருநாளிராத்திரியிலவ்வழியிலொருசத்திரத்திலவந்துதங்கினான். அச்சத்திரத்தி லேதோவொருகாரணத்தினாலவ்வர்த்தகன்முன்னமேபோயிருந்தபடியினால, அவனந்தராசகாரியதுரந் தரனுக்கு[3] மிகவுமுபசாரம்பண்ணி, ஐயா, நீரென்னோடுகூடத்தயைசெய்துசாப்பிடவேண்டுமென்றுபி ரார்த்தித்தான். அக்காரியக்காரனவன்பண்ணினமரியாதையாலேமிகவுஞ்சந்தோஷித்தவனோடுகூடப்போ சனம்பண்ணினான். பின்பவ்விருவரும்வெகுநேரம்பேசிக்கொண்டிருக்கையில, அவ்வர்த்தகனக்காரியக் காரனைப்பார்த்து, ஐயா, நீர்சினேகத்துக்குயோக்கியராகக்காணுகிறீர், ஆகையாலநீரிவ்விடத்திலென் னோடுகூடப்பத்துநாளைக்கிருந்து, அப்பாலும்முடையவனுவலைக்குறித்துநீர்போகலாமென்றான். அதற் கக்காரியக்காரன், ஐயா, உம்மைவிட்டுப்போகவெனக்குமனசில்லை, ஆனாலென்னெசமானன்சொன்ன காரியத்தைச்சீக்கிரத்திலேமுடித்துப்போட்டு, மறுபடியுமிடத்திற்குவரவேண்டுமென்கிறமனசெனக் கிருக்கிறது, ஆனாலதுசீக்கிரத்திலேமுடியுமாவென்றுசந்தேகப்படுகிறேனென்றான். அவ்வர்த்தகன்நீர் தையெனக்குச்சொன்னாலதுவென்னாற்கூடுமானதாயிருந்தால், அதைநானுமக்குச்சீக்கிரத்திலமுடித்துத் தருவேனென்றான். அக்காரியக்காரன்நீரெனக்குநல்லசினேகிதராயிருக்கிறதினால, அவ்விரகசியத்தையும மோடுசொல்வேன், அதென்னவென்றால, இதற்கடுத்தகிராமத்திலிருந்துதர்மம்பண்ணிக்கொண்டிருக்கிற

[1] தாழ்மை, பணிவு. [2] பிரயாணம், பயணம். [3] அர்த்தர்ன, தாவகுறவன.

வொருவர்த்தகன்றலையைநான்கொண்டுபோகவேணுமென்றான். அதற்கவ்வர்த்தகன்சிரித்து, ஐயா, அவனுன்தான்; உமக்குமிவர்களுக்கும்பயோகமாகவென்றலையைச்சந்தோஷத்தோடுமக்குத்தருவேன், நீர்சுகமாக்கொண்டுபோமென்று சீக்கிரத்திற்றனிடத்திலிருந்தவொருகத்தியையவனகையிலேகொடுத்தான். அக்காரியக்காரனீர்தானவ்வர்த்தகனென்றாச்சரியப்பட்டு, உடனேவெட்கமும்பட்டு, வேறொன்றும்பேசாமற்றன்னையனுப்பினவர்களிடத்திற்போய்; அவ்வர்த்தகனுடையகுணங்களையுமநடத்தைகளையும்வனுக்குச்சொல்லி, அவனறலையைத்தாங்களேகேட்டனுப்பினாலவனேநல்லமனதோடேயதையுங்களுக்குக்கொடுத்தனுப்புவான், அதைப்பற்றியாதொருபிரயாசமுந்தாங்களபடவேண்டியதில்லையென்றான். அவையெல்லாங்கேட்டவ்வர்களிர்மபவும்[4] ஆச்சரியப்பட்டு, பின்பவ்வர்த்தகனையவனுக்குத்தகுந்தமரியாதையோடழைப்பித்து, நீயொன்னுடையகெட்டநினைப்பைக்குறித்துமன்னிக்கவேண்டுமென்றுபசாரங்களைச்சொல்லி, அன்றுமுதல்வனோடுசினேகமாயிருந்தான்.

௫௰வது. கதை.

பூர்வகாலத்திலீரானதேசத்திலிராசரீகஞ்செய்துகொண்டிருந்தவொருபாத்ஷாவானவன, மற்றவர்சர்களையெல்லாந்தானவென்று[1], அவர்களிராசியங்களையெல்லாந்தனக்குக்கீழ்ப்படுத்தி, எல்லாப்பூமிகளுக்குந்தானேயொருசக்கிரவர்த்தி[2] ஆயிருக்கிறமகிமையையடையவேணுமென்று, இந்தக்கடினமானதீர்மானத்தையொருநாள்தனக்குள்ளேபண்ணிக்கொண்டான். மேலுமவனமறுதேசத்துராசர்களுக்குள்ளேடில்லிதேசத்தினமகாராசாவக்காலத்திலமிகவுஞ்சூரனாயிருந்தபடியினால, தானவனைமுதலிற்செயித்தால், மற்றவர்சர்களெல்லாம்பயந்துதனனோடுசண்டைசெய்யாமற்றனக்குக்கீழ்ப்படிவார்களென்றுமாலோசித்துக்கொண்டான். ஆகையாலவனயானைகுதிரைகாலாள்களமுதலாகியதனனுடையசேனையுடனேகூட்டிடில்லிமேலவந்ததைமுற்றிகைப்போட்டுக்கொண்டந்தமகாராசாவுடனேசண்டைசெய்யும்போது, அவவர்களுடையபடைத்தலைவர்களிலொருவீரனெய்த[3] பாணமப்பாத்ஷாவினறேனினமேற்படவ்வனறனகுதிரையினமேலிருந்துகீழேவிழுந்தான். அதினாலப்போதந்தமகாராசாவப்பாத்ஷாவைக்கைப்பிடியாப்பிடித்துக்கொண்டுபோய, அவனுக்குப்பாணமபட்டகாயத்தையாற்ற[4] தக்கவைத்தியஞ்செய்வித்து, மிகுந்தவுபசாரத்துடனேயவனைச்சிலகாலம்வைத்துக்கொண்டிருந்தான்; கடைசியினிமேனுமிருவருமொருவர்க்கொருவர்சினேகமாகவிருப்போமென்று, அவனுடனுடம்படிக்கைசெய்துகொண்டு, பினபவனந்தலைக்குத்தக்கவஸ்திராபரணங்களுமவாகனங்களுமாயுதங்களுமவனுக்குவெகுமானம்பண்ணி, அவனசொந்தநகரத்துக்கவனையனுப்பிவிட்டான். அந்தப்பாத்ஷாதனதேசத்திற்போய்ச்சேர்ந்தசிலமாசங்களபொறுத்து, திரும்பத்தனசேனைகளோடேபுறப்பட்டு, தனதேசத்துக்குச்சுற்றிலுமுள்ளதேசங்களிலிருந்தராசர்களுடனயுத்தஞ்செய்து, அவர்களையெல்லாஞ்செயித்தவர்களசேனைகளையுங்கூட்டிக்கொண்டு, தன்னதைப்பெரியதண்டாக்கிக்கொண்டு, முன்னையவுடம்படிக்கைதப்பி, டில்லியைச்சுற்றிக்கொண்டு, அம்மகாராசாவோடேபலமானசண்டைசெய்து, அவனைக்கைப்பிடியாப்பிடித்துக்கொண்டு, அவனகைக்குங்காலுக்குமவிலங்குபோட்டு, தனதேசத்துக்கவனைக்கொண்டுபோய, எள்ளளவும்பச்சாத்தாபமில்லாமலவனுடையகண்களிரண்டையும்பிடுங்கிப்போடுவித்து, அவனைமிகவுங்கடினமானகாவலிலவைத்திருந்தான். பிற்பாடப்பாத்ஷாவொருநாளசிறைச்சாலையைச்சோதிக்கப்போனபோது, அம்மகாராசாவவனைக்குறித்து, நீயொனகையிலகப்பட்டபோது, உம்மைநானிப்படிக்குநடப்பிக்கவில்லையேயென்ன; பாத்ஷாவதற்குத்தர்வாகவப்போதென்னைநீரிப்படிநடப்பித்திருந்தால, இப்போதும்மை

[4] நிர்மபவும, மிகவும.

[1] வெல்லுகிறது, செயிக்கிறது. [2] சக்கிரவர்த்தி, ராசாதிராசன். [3] எய்கிறது, தொடுக்கிறது. [4] ஆற்றுகிறது, வாசியாக்குகிறது.

நானிப்படிக்கு நடப்பிப்பேனென்று சொல்லிப் போட்டுத் தன்னரம்மனைக்குப் போய்விட்டான். அப்புறமம்மகாராசா வளவற்ற கோபத்துடனும் மனஸ்தாபத்துடனும் விசனத்துடனும் மக்காவலிலிருந்த சில காலம் பொறுத்து, அவனால் ரகசியமாகப் போதிக்கப்பட்டவொரு சந்தென்றவன, அந்தப் பாத்ஷாவம்பெய்து வேட்டையாடுகிற சாமர்த்தியத்தைக் குறித்துப் பேசின சமயம் பார்த்து, அய்யா, தன்கண்களாற் பாராமற்றன் காதினாற் கேட்கப்படுகிற பட்சிகளின் சத்தத்தின் வழியே பாணம் போட்டு, அப்பட்சிகளையடிக்கிற சாமர்த்தியம் மகாராசாவிற்குண்டென்று சொன்னான். அப்பாத்ஷா வக்ஷணத்திலேயம்மகாராசாவைத் தன்னிடத்துக்கழைப்பித்து, அவன் கையிலொரு வில்லையுஞ் சில வம்புகளையுங் கொடுப்பித்து, மகாராசாவே, நீ யிந்தப் பறவையை யதின் சத்தத்தின் வழியேயவ்வம்பாற் கொல்லவேண்டுமென்றவனோடு சொல்லி, அங்கொரு பறவையைக் கூவச்செய்தான். அம்மகாராசா வப்பாத்ஷா பேசின சத்தத்தின் வழியே யவன் பேரிலம்பாணத்தை யெய்தவனைக் கொன்று, தன் குரோதந்தீர்த்துக்கொண்டு, உடனே தானுங் குத்திக்கொண்டிறந்துபோனான்.

௩௰வது கதை.

தூரானென்கிற தேசத்தில் முற்காலத்திலிருந்த குடிகளிலொரு நல்ல குலத்திற் பிறந்தவொரு பெரிய மனிதன், தனக்கிருந்த செல்வமெல்லாம் நாளதோறுங் குறைந்தெளியவனாய்ப் போனதினாலே, தான் பாக்கியத்தினாற் பெருமையடைந்திருந்தவிடத்தில், எளிமையினாற் சிறுமையடைவது நல்லதல்லவென்று தனக்குள்ளாலோசித்து, அவ்விடத்திற்கு மிகவுந் தூரத்திலிருக்கின்றவோரூரிற் றன் குடும்பத்தோடு போய்ச்சேர்ந்து, அங்கெளிமைத்தனத்தோடு சீவித்துக்கொண்டிருந்தான்[1]. அப்போதவனுக்குத் தய்மூரென்ற பெயருள்ளவொரு குமாரன் பிறந்தான்; அவனுக்குச் சில வயசானபின்பந்தப் பெரிய மனிதனிறந்துபோனதினால், அவன் சமுசாரமாகிய வவன் பெண்சாதிக்குமந்தக் குமாரனுக்கும் வேறொரு மனுஷர் சகாயமில்லாமையினால், அவர்கள் பிராணச்சேதம் வரத்தக்க பலவித கஷ்டங்களிலகப்பட்டு, தெய்வ சகாயத்தினாற் பிழைத்திருந்தார்கள். அப்படியிருக்கையிலந்தச் சிறுபிள்ளையாகிய தய்மூர் கூர்மையான புத்தியுள்ளவனாகையினால், தங்கள் சீவனத்தின் பொருட்டவ்வூரிலொரு குடித்தனக்காரனுடைய வாட்டு மந்தையை மேய்த்துக்கொண்டிருந்தான், அப்போது தய்மூர் தனக்குப் பதினெட்டாம் வயசிலொரு காட்டிலத்தனாடுகளை மேய்த்துக்கொண்டு, அவற்றின் பின்னே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்; அங்கேயோரிடத்திற் பூர்வத்திலெவர்களாலேயோ புதைக்கப்பட்டிருந்தவொரு பணப்புதையலையவன் கண்டு, அதை ரகசியமாக வெடுத்து வைத்துக்கொண்டு, சில நாட்சென்றபிறகாடு மேய்க்கிற தொழிலை விட்டுவிட்டு, தனக்குக் கிடைத்திருந்த பணத்தைச் செலவு செய்து, சில மனிதர்களைக் கூட்டங்கூட்டிக்கொண்டு, அந்தக் காட்டிலொளித்திருந்து, வழிப்போக்கர்களைப் பயப்படுத்தியுமடித்துமவர்களுடைய பொருள்களைக் கொள்ளையிட்டுக்கொண்டுமிருந்தான். அதினாலேயவனுக்கு மிகவுந் திரவியஞ் சேர்ந்தபின்பு, தய்மூர் திக்கசம்பளங்கொடுத்து மிகவுஞ் சமர்த்தர்களான விரண்டாயிரஞ் சனங்களைத் தன்னிடத்திற் சேவகர்களாக வைத்துக்கொண்டு, சண்டைக்குத் தக்கத் துப்பாக்கி கத்தி முதலாகிய நல்ல வாயுதங்களையும், சில குதிரைகளையும், பின்னும் வேண்டியதுகளெல்லாஞ் சேகரித்துக்கொண்டு[2], அத்தேசத்திற்கடுத்த தஜுரானென்கிற தேசத்திற் பெரிய ராசாவிருந்த பட்டணத்துக்குத் தூரத்திலிருந்தவொரு கோட்டையின் மேல் விழுந்து, சண்டை செய்தந்தக் கோட்டையைக் கைவசஞ்செய்துகொண்டு, அங்குக்கிடைத்த வஸ்துக்களையெல்லாங் கைக்கொண்டு, பின்னும் வெகு சேனைகளையமர்த்திக்கொண்டு, அவர்களையுங் கூட்டிக்கொண்டு, அதற்குப் பக்கங்களிலங்கங்கேயிருந்த சில்லறை[3] கோட்டைகளின் மேற் போர்செய்து, அவைகளையெல்லாஞ் சுவாதீனம்[4] பண்ணிக்கொண்டு, மேலுங் கிராமங்களிலும் பட்டணங்களிலும் புகுந்து கொள்ளையிட்டுக்கொண்டும், வீடுகளைக் கொளுத்தி நாசம் பண்ணிக

[1] சீவிக்கிறது, பிழைக்கிறது. [2] சேகரிக்கிறது, தயார்செய்கிறது. [3] சில்லறை, சின்ன. [4] சுவாதீனம், தன்வசம்.

கொண்டே, இப்படிக்கிருந்தான். அந்தஞானதேசத்துப் பெரியராசாவானவனதைக் கேள்விப்பட்டு, திடுக்கிட்டு[5] இப்படிக் கலகம்பண்ணுகிறவனுடனொன்று கண்கள் செவந்து, உடனே தனக்குக் கீழ்ப்பட்ட ராசாக்களாயவர்கள் சேனைகளோடே கூடத் தனக்குதவியாகச் சீக்கிரத்தில் வரும்படி கட்டளைசெய்து, பெருங்கோபத்தோடே கடல்போலிருக்கிற தன் பெரிய சேனைகளுடனே புறப்பட்டு, சீக்கிரத்திற்போய்த் தப்பழூர் சேனையின்மேல் விழுந்தான். பின்பிரண்டு சேனைகளுங் கைகலந்து வெட்டுக்குத்துயும் பயங்கரமான சண்டைசெய்தபோது, தெய்வபலமிருப்பதினாலே தப்பழூர்தானே செயமடைந்து, அப்பெரியராசாவைப் பிடித்துக் காவலில் வைத்துப்போட்டு, அப்பெரியராசாவின் மகிமையுள்ள சிங்காசனத்தின்மேலேறியுட்கார்ந்து தானந்த ஞானதேசாதிபதியாகப் பட்டங்கட்டிக்கொண்டான்.

௩௧வது. கதை.

பலவித கல்விகளையுநல்ல வாசிரியர்களிடத்திற் சந்தேகமறக் கற்ற பராக்கிரமசாலியான[1] ஒருராசன், தன்கீழ்வாழுஞ் சனங்களுக்குத் தன்னாலொரு குறைவுமில்லாமல், நெடுங்காலம் ராசியபாரத்தைச் செலுத்திக்கொண்டிருக்கையில்; அவனுக்கு மிகவும் மூப்பு[2] வந்தபடியினாலே, இனிமேல் இந்த ராசியபாரத்தை நம்முடைய குமாரன்மேற் சுமத்தவேண்டுமென்று தன்னுள்ளே நினைந்து; ஒருநாள் தன் மந்திரியினாலே தன் குமாரனைத் தன்னிடத்திற்கு வருவித்து, அவனுக்கு ராசதந்திரம்[3] முதலாகிய பிரயோசனமான காரியங்களைக் குறித்துபதேசித்துக்கொண்டிருந்தபோது, அவனைக் கேட்டகேள்வியாவது; பாலனே, நீ இந்த ராசசெல்வத்தை எப்படிப்பட்டதென்று நினைத்திருக்கிறாய், அதைத் தெரியமாயென்னோடே சொல்லென்ன; அந்தக் குமாரன் செல்வமுடையவர்கள் மூடர்களாயிருந்தாலுமவர்களை எல்லாரும் பூசிக்கிறார்கள், அவர்களுடைய தப்பிதமான மொழிகளையும் வேதவாக்கியம்போலெண்ணி அப்படியே நடக்கிறார்கள்; செல்வமில்லாதவனெல்லாங் கற்றபண்டிதனாயிருந்தாலுமவனைச் சனங்கள் பூசிக்கிறதில்லை, அவனுடைய குற்றமில்லாத மொழியையுமேற்றுக்கொள்ளுகிறதில்லை; ஆதலாற் செல்வத்தைக் காட்டிலும் வேறொன்றைப் பெரிதென்று நினைக்க எனக்குத் தோன்றவில்லையென்றான். அதற்குத் தகப்பன் நகைத்து, குமாரனே, என் பிள்ளையாகிய நீயுந் தெரியாதவர்களைப்போலிப்படி நினைக்கலாகாது; இதோ நான் சொல்லுகிறதை நீ மிகவுஞ் சாவதானமாக் கேள்; என்னென்றால், இந்தவுலகத்திற் கல்விப்பொருளென்றுஞ் செல்வப்பொருளென்றும் இரண்டு பொருள்களிருக்கிறதுகள்; அவற்றுட் கல்வியொரு காரியத்தை முயன்று முடித்தற்கு முதற்காரணமுஞ் செல்வமதற்குத் துணைக்காரணமுமாகியிருக்கிறதுகள். எப்படியென்னில் பிள்ளையைச் செய்தற்கு முதலாய் முன்னையது முக்கியகாரணமாயிருக்கின்றது; அப்படியென்ன, முன்னையதற்குப் பின்னையது முதற்காரணமாகாதோவென்னில், அதாகாது, துணைக்காரணமேயாகும்; ஏனென்னிற் கல்வியில்லாத சில செல்வவான்களுக்குக் கணக்குவைத்தல், ஓலைக்கோள்[4] செய்தல், முதலாகிய வெளிக்காரியங்களுக்கும் மற்றத்தியமாய் வேண்டியதினாலேயும்; கல்வி நல்லொழுக்கங்களை விளைக்கும், செல்வமவற்றையழிக்கிறதுமல்லாமற் றீயொழுக்கத்திலும் மனதைத் தூண்டுமே; கல்வியுள்ளவனைக் கோவித்தால் யாருக்கும் பதிர்வமிராது, செல்வமுள்ளவனப்படியானால் வெகுசனங்களுக்குத் துவிளைவிப்பன்; கல்வியென்கிற பொருளொருவனுக்கு மிச்சமாய்ச் சேர்ந்தாலவனைத் தேசத்தாரெல்லாருங் கொண்டாடுவார்கள், அவனுடைய கீர்த்தி திகழ்ந்திருக்கும், யாதொரு தொழிலையுங் கூர்மையு நாணயமுமாகச் செய்வான்; இவையுமன்றிச் செல்வப்பொருட்குப்போல் விப்பொருட்கு வெள்ளத்தாலபாயமில்லை, அக்கினியினாற் சலனமில்லை, அதிகாரியாற் பறிக்கப்படமாட்டாது, தாயாதிகள் பங்குக்கு வாரார்கள், கள்ளர்களாற் கொள்ளையிடவுமுடியாது, வரவரக் கனமல்லாமற் குறைவு

5 திடுக்கமேறுது, திகைவிசேறது.

1 பராக்கிரமசாலி, சௌரியவான். 2 மூப்பு, கிழத்தனம். 3 ராசதந்திரம், ராசிகளுடைய முறைவித்தை. 4 ஓலைக்கோள், ஓலை போக்குவரத்து.

வராது, சகலபொருள்களையும்பற்றின மனோசன்னியக்கியானமும் இந்திரியசன்னியக்கியானமுந்தெளிவாயிருக்கும்; ஆத்துமக்கியானமுந்தெய்வக்கியானமுமுறப்பலிக்கும், அதனாலசற்கதியுமடையலாம்; ஒருவனுக்குக்கொடுக்கக்கொடுக்கவிறைத்தகிணற்றூறுகிறதுபோலூறிப்பெருகிக்கொண்டேயிருக்கும். செல்வமோவப்படியன்று. ஆதலானீயும், மகனே, கல்விப்பொருளையேமுன்னதாகமதித்ததைத்தேடி, அதைக்கொண்டுசெல்வப்பொருள்களையுமீட்டி[5] சுகமாயிருப்பாயென்றிப்படிப்புத்திசொன்னான். அவனப்படியேயதைக்கேட்டுக்கொண்டன்றுமுதல்விசேஷமாய்க்கல்விப்பொருளையும், அதைக்கொண்டப்பாற்செல்வப்பொருளையுஞ்சம்பாதிக்கும்படியாமுயற்சிசெய்தான்.

௯௨-வது கதை.

பூர்வத்திலேமதுரைத்தேசத்திலிருந்திராச்சியபரிபாலனம்பண்ணிக்கொண்டிருந்தபாண்டியர்களென்றவர்களிலொருவன், தன்றேசத்துச்சனங்களின்சுகதுக்கங்களைத்தனக்குச்சுகதுக்கங்களாகவெண்ணி, நீதியோடிராச்சியம்பண்ணிக்கொண்டிருந்தான். அப்பொழுதவனந்தப்பட்டணத்துச்சமாசாரங்களையுநடத்தைகளையும்பலவேகாட்களாலேதெரிந்துகொண்டதுமல்லாமல், அவைகளைத்தானேதன்கண்களாற்பார்த்துத்தெரிந்துகொள்ளுகிறதுதன்றுரைத்தனத்திற்குமிகவுநல்லதென்றெண்ணி, ஒவ்வோரிராத்திரியிற்றனியேமாறுவேஷத்துடனே[1] மிகவுமிரகசியமாகப்புறப்பட்டு, அப்பட்டணத்திலங்கங்கேநடந்தகாரியங்களையறிந்துகொண்டிருப்பான். அவ்வழக்கப்படியவனொருநாளிராத்திரியில்நகரி[2]சோதனைக்குவருகையில், சனசந்தடியில்லாதவேளையிலொருபிராமணன்வீட்டிலுண்டாகியபேச்சுக்குரலைக்கேட்டங்கேயிரகசியமாகநின்றான். அப்போதங்கேநடந்ததென்னென்றால், அந்தவீட்டுப்பிராமணத்தி தன்புருஷனைப்பார்த்து, நீரிப்போதுகாசிக்குயாத்திரையாகப்போகவிருக்கிறீரோ; உம்மைவிட்டெனக்குவேறொருதவியுமில்லையே; நானெப்படியிவ்விடத்திற்றனியேபயமில்லாமலிருப்பேன், சீவனம்பண்ணுவேனென்றுவிசனப்பட்டாள். அதற்கப்பிராமணனீயேன்விசனப்படுகிறாய், இவ்வுலகத்துச்சனங்களுக்கிராசாவேதாயுந்தந்தையுமாகையாலவனுன்னைக்காப்பாற்றுவான், நீயாதொன்றுக்கும்பயப்படவேண்டுவதில்லை; என்றவளுக்குச்சொல்லிவிட்டவன்காசிக்குப்போய்விட்டான். அவ்வரசனதைக்கேட்டுக்கொண்டுதன்னரமனைக்குவந்தபின்பு, அன்றுமுதலப்பிராமணத்திக்கன்னவஸ்திரமுதலானவைகளைத்தானகொடுத்துவரவேண்டுமென்றும்; அவளுக்குமாத்திரந்தானவைகளைக்கொடுத்தாலதினாற்றனக்கபகீர்த்திகிட்டமாகுமென்றும்; அப்படிக்கதுநேரிடாமலப்பட்டணத்துப்பிராமணர்களுக்கெல்லாங்கூடவவைகளைத்தானகொடுக்கவேண்டுமென்றும்; இந்தப்பிரகாரந்தனக்குள்ளேதீர்மானித்துக்கொண்டபடியேயெல்லாருக்குமவைகளைக்கொடுத்துக்கொண்டுவந்தான். மேலும்வனப்போதைக்கப்போதுநகரிசோதனைக்குவருகையில், அப்பிராமணத்திவீட்டண்டையிற்றப்பாமல்வனவந்துநின்று, இரகசியமாகவவள்வீட்டைச்சோதித்துக்கொண்டுபோவான். அப்படியிருந்தகாலத்திலவ்வரசனவ்வழக்கப்படியொருநாளிராத்திரியிலவ்வீட்டண்டையிற்சோதனைக்குவந்தபோது, முன்னேகாசிக்குப்போனபிராமணன்றுதானதன்வீட்டுக்குவந்துவிட்டபடியினால், அவனுமவன்மனைவியும்[3] உள்ளேபேசிக்கொண்டிருந்தார்கள். அவளுடையகணவன்[4] வந்ததுவிராசாவுக்குத்தெரியாததாகையால், இவ்வீட்டிலேபுருஷக்குரல்கேட்கப்படுகிறதே; ஒகோ, நம்முடையநீதிதப்பினதுபோலிருக்கிறதே; என்றவனுக்குவிசனமுண்டாகி, இதினுண்மையைத்தானறியவேண்டுமென்றவசரப்பட்டவ்வீட்டுக்கதவையவனிடித்தான். அப்போதப்பிராமணன்யாரங்கேயென்றதட்டியாக்கூப்பிட்டுக்கேட்டதுமல்லாமல், தன்பெண்டாட்டியின்பேரிலேயது

[5] ஈட்டுகிறது, சம்பாதிக்கிறது.

[1] வேஷம், கோலம். [2] நகரி, இராசதானி. [3] மனைவி, பெண்சாதி. [4] கணவன், புருஷன்.

மானமுமபட்டான். பிறகவிசசாமுனிவனகாசிககுபபோனவனெனறுதெரிநதுகொணடு, இகெ
ட்டு, மோசமவநததே, நாமிககதலையிடித்ததிஞலபிராமணனுககவவிடததிற்சநதேகமவருமேயென
றநினைதது, உடனேயபபடிபபட்டதபபிதஞ்செயததனமுனைகையைவெட்டியஙகேயேபோட்டுவிட்டு,
அநதசிரேணியில்[5] உளளமறறவீடுககதவுகளையெலலாமபூட்டிககொணடுவாசகே[6] சீகிரத்திற்றன்ன
மனைககுபபோய்விட்டான்; மறுநாள்த்தன்மந்திரிமுதலானவர்களுககிராததிலநடநதசமாசாரததைதெ
றிவிததான். அவர்களாலபபிராமணனுககுதனபெணசாதியினிடததிற்சநதேகமிலலாமற்போயிறறு. பிற
கவவர்சனபொனனுற்கைசெய்விததுககொணடான்; அதனாலவனன்றுமுதற்பொற்கைபபாணடியனெ
னறுபேர்சொலலபபட்டிருநதான்.

௬௩வது. கதை.

பூர்வகாலத்திற்கல்விமானுமஞானவானுமாயிருநதஇடைககாடனெனகிறவோர்சித்தர், ஓர்ரணியத
திலாசிரமமைத்துககொணடிருககையில, தமதுகையிலுளளவோர்தடியினலோரிடததிறமபாட
டெசெருககல்லிககொணடிருநதபோது[1], அவவிடததிற்கணீரெனறவோரோசையவருககுக்கேட்டது. அ
தையவருறறுபபார்ககையிலவவிடததிலொருகடாய்[2] நிறையப்பொற்காசிருக்கக்கணடு, அபபா, அபபா,
எனறுபயநதவர்போலவுரக்கக்கூபபிட்டுககொணடோடினர். அதுவழியாநடநதபாட்டைசாரிகளதைக
குறிததவரைப்பெனனெனறுகேட்க; அபபா, நாளுட்கொலலி[3] கணடேனெனறுசொலலிககொணடப
டியேபயநதோடிபபோயினதால, அவர்களுமதுகளளரோ, பாமபோ, புலியோ, சிஙகமோவெனபெரபபட
டவேதோவொனறு, மனிதனைககொலலததககதெனறெணணிககொணடு, அபபடியேபயநதோடிப
போய்விட்டார்கள். அவர்களிலிருவர்மிகவுநதுணிநதபோககிரிகள, இதையறிவோமெனறவர்வநதவ
ழியைபபிடிததுககொணடுபோயவவடவியிலநுழைநது, அவர்தாடுகள்மேயுமிடஙகணடுககுபபோய்ப்
பார்ககையில, அவர்தடியுங்கமபளியுமஙகேகிடததலககணடு, அவவிடததிலுறறுபபார்ககையிலோர்
புதையலைககணடார்கள; ஓகோ, இதைத்தானபபாவமபபடிசொனனனநதபைததியககாரனிடையன,
ஆகிலுமது நமககுநலலதுதானபுறததியாருமநமமைததொடராமைககெனறெணணிககொணடு; அவவி
ருவருமதிலேதாஙகளசுமககததககதுமைகட்டிககொணடு, மறறதுகளையுஙகொஞசஙகொஞசமாய்த்தாஙக
விதததிற்கொணடுபோகவெணணிககொணடு; அவவிடததைபபிறராருமறியாமைககாகவுந தஙகளுககு
மாததிரமதுதெரியுமபடிககாகவும, மறுபடியுமனனிருலேமூடியதினபேரிறசிலகுறிகளைவைததுபபோ
னர்கள். அவவாறவர்களசிறிதுதூரமபோயத்தஙகளூர்ருகாமையில்[4] வநதபோது, இனனமிகவுமபொ
ழுதிருநததனாலததிரவியமூட்டைகளோடததனுளப்புகவஞசி, அவவிடததோர்தோபபின்மறைவிலிருககை
யில்; அவர்களுககுபபசியதிகமாகையால, ஒருவனநதத்திரவியமூட்டைகளைபவவிடததிறகாததிருககவும,
மறறவனவவூர்க்குளளேபோய்க்கொஞசமபலகாரம்[5] வாஙகிவரவும, அவறறையவவிருவருமபொசிததுப்
பொழுதுபுகுநதபின்பிரூட்டிலமமூட்டைகளைததஙகளவீட்டுககுககொணடுபோகவும, தஙகளுககுளளே
யாலோசிததுககொணடார்கள். அனனலநதபபலகாரமவாஙகபபோனவனதனிததபோது, ஐயோ, என்
கூட்டாளிககுமொருமூட்டைத்திரவியஙகொடுககநேரிட்டதே; இதைநாடேடுமபேககாமலினனுமக்காட்
டிலுளளவிலதாரமானபொக்கசததிறகூட்டவனுககுபபஙகுகொடுககவேணடியிருககிறதே, இதறகெபப
டியெனறியபபடிவிசனபபட்டு; கடைசியிலவனைககொனறுபோட்டிஙகுளளவனமூட்டையையும, அவ

5 சிரேணி, வரிசை. 6 வாசகே, பிரகாரம்.

1 கலனுகிறது, தோணடுகிறது. 2 கடாய், கொப்பரி. 3 ஆட்கொல்லி, மனிதனைககொலவது. 4 அருகாமை, கிட்டம். 5 பலகாரம், சிறுதீனி.

குள்ளவன்பங்கையுந்தானேயனுபோகிக்கத்தீர்மானித்துக்கொண்டு, அதற்குவேண்டியமார்க்கங்களையுந்தனக்குள்ளேயோசித்துக்கொண்டு; அவன்கொண்டபலகாரத்திலேதன்பங்கைமுன்னாடிதானேசாப்பிட்டுவிட்டு, மற்றதுகளிலேவிஷங்கலந்தவனிடத்திற்கொண்டுபோனான். அப்படியிருக்கையிலங்கிருந்தவனும், அப்படியேயத்திரவியமூட்டையையும்போக்கத்திலேபங்கையிவனுக்குக்கொடுத்தலைக்குறித்துமிகவும்வருந்தி, இவனைக்கொல்லத்தீர்மானித்தொருகருங்கல்லையெடுத்துக்கொண்டு, அவர்களிறங்கியிருந்தவந்தப்பெரியமரத்தின்மேலேறியொருபுதையில்[6] ஒளித்திருந்தான். அப்போனவனந்தவிஷப்பலகார்மூட்டையையும்ம்மோர்ச்செம்பையுங்கொண்டுவந்தமரத்தடியிலவைத்துப்போட்டு,இவிடத்திலிருந்தவனித்திரவியமூட்டைகளைவிட்டுப்போட்டெங்கேபோனானென்றுசுற்றுமுற்றும்பார்க்கையில; ஐயோ, அம்மரத்தின்மேலிருந்தவன்குறிபார்த்துவிட்டகருங்கல்நேராகவந்துவிழுந்ததனாலந்தின்றவன்தலையுடைந்துடனேயவனுதைத்துக்கொண்டிறந்தான். அப்போதம்மரத்திருந்தவனதைவிட்டுச்சந்தோஷித்தோடிறங்கி, அப்பிணத்தையிழுத்தவிடத்தொருபுதரிலொளித்துவிட்டு, சீக்கிரமாய்த்தன்பசியினாலந்தப்பலகாரத்தைத்தின்றம்மோரையுங்குடித்தான்; உடனேயவன்றலையுங்கிறுகிறென்றுசுற்றிவந்தமூட்டையண்டையேவிழுந்துமரித்தான்.

௬௰-வது கதை.

ஸ்ரீதிலகமென்றவொருபட்டணத்திருந்தவோரிராசா, ஒருநாளகிழக்குவெளுக்கிறநேரத்தில்த்தன் படுக்கையினின்றெழுந்து, தன்னரமனை[1] உப்பரிகையின்[2] வாசற்படியினின்று, அங்கேயிருந்தவீதியையெட்டிப்பார்த்த[3]பொழுது,அதிலுள்ளகடைகளின்முன்பாகச்சிந்திக்கிடந்தின்பண்டங்களைப்பொறுக்கித்தின்றுகொண்டிருந்தவோரொளியசிறுபையனைக்கண்டு, மறுபடியுந்தன்தலையையுள்ளேவாங்கிக்கொள்ளப்போகையில, அவ்வாசற்படியவன்கால்விரலில்த்தடுக்கினதினால்[4] அதிற்சிறுகாயம்பட்டுக்கொஞ்சமுதிரங்கண்டது. அப்போதவ்வரசனுமின்றுவிடியலின்மம்படுக்கையைவிட்டவுடனேயிவன்முகத்தைப்பார்த்தோமே, அந்துற்பாக்கியத்தான்மதுவிரலிற்காயம்பட்டுதிரங்கண்டதே, இப்படியேநாள்தோறுமிவன்துற்பாக்கியமுகத்தையெத்தனையோபேர்பார்ப்பார்களே, அதினாலவர்களுக்கெல்லாமென்னென்னபொல்லாப்புநேரிடாது;ஆகையாலிவ்வெகுசனவிரோதியையிப்பூமியிலவைக்கிறதுதருமமன்றென்றுதனக்குள்ளேயாலோசித்துக்கொண்டு, அங்கிருந்தபடியேதன்கொலையாளிகளையழைப்பித்து, அவர்களுக்கப்பையனைச்சுட்டிக்காட்டி, நீங்களவனைக்கொலைக்களத்திற்குக்கொண்டுபோயவன்தலையைவெட்டியெறிந்துபோட்டுவாருங்களென்றவர்களுக்காக்கினையிட்டான். அவர்களப்பிரகாரமங்கேபோயப்பையனைப்பிடித்துக்கொண்டு, நம்மிராசாவின்றுவிடியவிற்படுக்கைவிட்டெழுந்தவுடனேமுதலிலேயுன்துற்பாக்கியமுகத்தில்விழித்தாராம்; அதினாலவருடையகால்விரலிலவாசற்படியிடறிக்காயம்பட்டிரத்தம்வடிந்ததாம்; ஆகையாலுன்னைக்கொலைக்களத்திற்குக்கொண்டுபோய்ச்சிரச்சேதம்பண்ணச்சொல்லியெங்களுக்கவர்கட்டளைகொடுத்தார்; நீயெங்களோடவிடத்துக்குவாவென்றவனைப்பிடித்திழுத்தார்கள். அதைக்கேட்டவப்பையலதிர்கேட்டுநடுங்கியவர்களைப்பார்த்து, ஓஐயன்மார்களே, நானுங்களிஷ்டப்படியவ்விடத்துக்குவருவேன், யாதொருதடங்கலுநான்சொல்லவில்லை; ஆனாலுங்களாலெனக்கொருதயவுசெய்யவேணும், அதாவதுநானம்மிராசாவைக்கண்டொருவார்த்தைபேசவேணும், அப்படியானபிறகென்னைநீங்களவெட்டிப்போடுங்களென்று, அவர்களைப்பவனகெஞ்சி[5] கேட்டுக்கொண்டான். அவர்களதை

[6] புதை, புதர்.

[1] அரமனை, அரசன்வீடு. [2] உப்பரிகை, மேல்மெத்தை. [3] எட்டிப்பார்க்கிறது, வளைந்துபார்க்கிறது. [4] தடுக்கிறது, இடறுகிறது. [5] கெஞ்சுகிறது, வருந்துகிறது.

யவவிராசாவுக்கறிவித்து, அவனுத்தரவினாலிவனையவன்முன்பாகக்கொண்டுபோய்விட்டார்கள். அப்போ திப்பய்யல்லவவிராசாவை முன்னேவணங்கி, ஓமகாராசாவே, தேவரீரின்றுவிடியலிலெழுந்தவுடனே முதல்முதல், இவ்வுலகத்தில்மிகவுஞ்சிறியவனாகியவடியேனுடைய நிர்ப்பாக்கியமுகத்தினைமிழித்ததினால், தங்களுடையகாலவிரில்றப்பகாயம்பட்டறப்பவுபத்திரவந்தங்களுக்குச்சம்பவித்ததென்று, அடியேன்தலையை வெட்டிப்போடவிவர்களுக்குத்தாங்கள்கட்டளையிட்டீர்களாமே; அதுநிசமானால்தற்குள்ளாகக்காத்திருக்கிறேன். ஆனாலின்றுவிடியற்காலத்திலடியேன்தூங்கியெழுந்து, மற்றயார்முகத்திலுமிழித்ததற்குமுன்னே, இவ்வுலகத்திற்குப்பெருந்தலைவராகியதேவரீருமடியேனுந்தானசந்தித்தோம்[6]; தேவரீருடையதிருமுகத்தையேமுதலிற்பார்த்தவெனக்கிப்படித்தலைபோகத்தக்கபொல்லாங்குநேரிட்டதே, இதற்கென்ன தீர்ப்போவதைத்தேவரீரடியேனுக்கனுக்கிரகம்பண்ணவேண்டுமென்றடியேன்தேவரீருக்குவிண்ணப்பம்பண்ணவந்தேன்; தேவரீரிதற்குத்தீர்வுசொன்னபின்படியேன்தேவரீருடையநியமனப்படிசாகத்துணிந்திருக்கிறேனென்றான். இதைக்கேட்டவவ்விராசாவாச்சரியத்தோடேவெட்கப்பட்டு, அவனைத்தனக்குள்மிகவும்மெய்ச்சிக்கொண்டு[7], அன்றுமுதலவனைத்தன்னறமனையில்வைத்துக்கொண்டு, சகலகலையுமவனுக்குப்படிப்பித்து, அவனதுகளிற்சமர்த்தனாகியோக்கியனானபின்பவனுக்குமுதலிற்சிலசில்லறையலுவல்களைக்கொடுத்து, அதுகளிலேயவன்வல்லவனானவுடனேயவனுக்குமந்திரியுத்தியோகங்கொடுத்துத்தனவிடத்திலேவைத்துக்கொண்டான்.

௯௰௩. கதை.

வடக்குத்தேசத்திற்சர்வாதிகாரியாயிராச்சியாதிகாரஞ்செய்துகொண்டிருந்தவொருபெரியராசனானவன், தனக்குக்கீழ்ப்பட்டிருந்தசின்னராசாக்களிற்கோபாலசிங்கென்றவன், உபாயமும்புத்தியுந்தைரியமுமுடையவனாயும், தன்னிடத்தில்மிகுந்தவிசுவாசமுள்ளவனாயுமிருந்ததுநிச்சயமாகத்தெரிந்துகொண்டான்; அதினாலொருநாளவனைத்தன்னிடத்துக்கழைப்பித்து, தன்பெரியதண்டுகளுக்கெல்லாமவனைச்சேனாதிபதியாக்கி, விலையுயர்ந்தவஸ்திரங்களுமாபரணங்களுந்திரவியங்களும்வாகனங்களுமாயுதங்களுமவனுக்குவெகுமானமாகக்கொடுத்து, அவனைமகிமைப்படுத்தி, அப்போதுதனக்கடங்காமலிருந்தராசாக்களைச்செயித்தவர்களைத்தனக்குப்பகுதிகட்டும்படிச்செய்துகொண்டுவரச்செய்யவேணுமென்றவனுக்குத்தரவுபண்ணினான். பின்புகோபாலசிங்கந்தச்சேனைகளெல்லாந்தன்னைச்சூழ்ந்துவரப்புறப்பட்டுப்போய், அங்கங்கிருந்தசிலராசாக்களுடனேசண்டைசெய்தவர்களைவென்று, அவர்களெல்லாந்தன்னெசமானனாகியவந்தப்பெரியராசனுக்குக்கீழ்ப்பட்டுப்பகுதிகட்டும்படியாயவர்களோடுடம்படிக்கைகள்செய்துகொண்டு, திரும்பியந்தப்பெரியராசாவின்சமுகத்திற்குவந்து, நடந்தசங்கதிகளையவனுக்குவிண்ணப்பம்பண்ணினான். அப்பெரியராசாவிற்கவனிடத்திலளவற்றசந்தோஷமுண்டாகி, அவனைத்தன்கையால்த்தழுவிக்கொண்டதுமல்லாமல், அவனுக்குமகாராசாவென்கிறவொருபெயருமொருபெரியசாகீருங்கொடுத்தான். அப்போதுகோபாலசிங்கந்தப்பெரியராசாவிற்குவந்தனம்பண்ணி, அடியேன்தங்கள்சமுகத்திலொன்றுமனுப்பண்ணிக்கொள்ளவிருக்கிறேன்; அதென்னவென்றால்நானென்னுடையபுசபலத்தாற்செளரியமுள்ளராசாக்களையெல்லாஞ்செயித்துவந்தபடியினால், என்னாற்செயிக்கப்பட்டவந்தராசர்களெல்லாரும்பொன்னினாலென்தோளைப்போலவொருருபஞ்செய்துவைத்துக்கொண்டு, அதைப்பூசிக்கும்படிக்குத்தாங்கள்கட்டளையிடவேண்டுமென்றுபிரார்த்தித்தான். அந்தப்பெரியராசாவவன்பேரிலிருந்ததயையினாலப்படியேநடப்பிப்பேனென்றதையங்கீகரித்து, பின்பந்தப்பிரகாரமொருகட்டளையெழுதி,

[6] சந்திக்கிறது, நேரிடுகிறது. [7] மெய்ச்சுகிறது, கொண்டாடுகிறது.

அதிலநதச்சாககளெலலாவகையெழுததுபபோடுமபடியவர்களிடததிற்கைதயனுபபினுன். அதிலேதாக்ஷிணியததினுலும்[1]பயததினுலுமெலலாருமகையெழுததுபபணணினுர்கள; ஆனுலராசாமானெனறவனொருததனமாததிரமநதக்கடுதாசியையவமானமபணணித்திருபபினபடியால, அநதபபெரியராசாவவனையழைபபிததுநீயெனபபடிசசெயததாயெனறுகேடடபோது; ராசாமானெனககுசசமானமானசேவகனதோளைநானச்சிபபேனு, தாஙகளவனுககுமெனககுஞசணடைககுசசெலவுகொடுததா, எனனையவனசெயிததாற்பினபுநானபபடிசசெயவேனெனறுன். அநதபபெரியராசாவபபடியேயநதவிருவர்க்குமுததரவுகொடுகக, பின்பவர்களிருவரிலவனவன்தன்தன்தளததுடனே[2] யோரிடததிலிரணடுபககததிலிறஙகினுர்கள. அபபோதநதபபெரியராசாவினமநதிரிகளவவிருவருககுமநீஙகளெடடுநாளவரைககுஞசமமாயிருககவேணடுமெனறுசொலலியனுபபினுர்கள். அபபாலநதமநதிரிகளநாலுநாள்பொறுததது, அவவிருவருடையசேனைகளிடததிலுநதஙகளர்க்காரர்களையனுபபியஙகேநடநதசமாசாரததைவிசாரிததபோது, கோபாலசிஙகினபெரியசேனைகளிலிருநதநலலசூரர்களுமவர்களகுதிரையாணுவஙகளமுதலானவைகளுமுராசாமான்பககததிற்சேர்நதிருநததாகவவர்களுககுததெரிநதபடியினுல, இதையவர்களநதபபெரியராசாவிற்கறிவிததது; ஆணடவரே, இதினுலேகோபாலசிஙகுசெயிக்கமாடடானெனறுதஙகளசித்தததிறகுததெரிகிறபடியினுல, இனிமேலவர்களைபபோர்ரடுவிததுபபிரயோசனமிலலாமற்சேனைகளைநஷடபபடுததவேணடியதிலலையெனறுர்கள. பின்பப்பெரியராசாவதைமெயயெனறுயோசிததவர்களிருவரையுமழைபபித்தவர்களுககுச்சமாதானமபணணுவித்து, அத்தோளினபூசையைக்கூடாதெனறுநிறுததிபபோடடான.

௬௬வது. கதை.

ஜனபாலனெனறவோரிராசாதனனுடையமநதிரிபிரதானிமுதலானவர்களெலலாருஞசபையிலகூடியிருககையில, தனமுணடாயிருநதால்த்தைரியமுஞ்சௌரியமுமைசுவரியமுமபிரதிஷ்டை[1] தானதருமமபரோபகாரமுதலானசகலசமபததுமடையலாம; ஆகையால்த்தனததுககுமிஞசினவஸதுமறறொனறிலலையெனறதைககுறிததுமிகவுஙகொணடாடிபபேசினுன. அபபோதவனுமந்திரியொருவனுககுபபுததியுணடாயிருநதாலவனயுக்தாயுக்தந்தெரிநதுகொளளலாம, தனககுககஷடமவராமல்த்தனனைககாபபாறறிககொளளலாம, செளககியததையுமடையலாம, ஆகையாறபுததிதனததைபபார்ககிலுமிஞசினவஸதுவெனறுசொனனுன. இநதபபடியவவிராசாவுமமமநதிரியுஞசலலாபிததுககொணடிருககையில[2]; இரணடுபிராமணர்கள, வெவவேறூரிலிருநதுவநதவர்கள, முனனமேயொருததனையொருததனறியாதவர்கள, அவவிராசாவுடையசமுகததில[3] வநதுநினறு; ஓமகாபபிரபுவே, நாஙகளமிகவுமேழைகள, அனனவஸதிரமிலலாமற்றரிததிரததுடனேயிருககிறோம; பழஙகளுளளவிருக்ஷததைபபக்ஷிகளெபபடியடுததுததஙகளபசியைததீர்த்துககொளளுகிறதுகளோ, அபபடிதஙகளகடாக்ஷததினுலெஙகளுடையதரிததிரததைநீககிககொளளவேணடுமெனறுகோரிததஙகளிடததுககுநாஙகளவநதோமெனறுதனிததனிசொலலிககொணடார்கள. அபபோதவவிராசாமனதிளகியவவிருவருககுமனனபானுதிகளுககுவேணடியசாமானகளகொடுககசசொலலித்தனனுடையவுககிராணககாரனுககு[4] கடடளையிடடபோது, அமமநதிரியவவிருவரிலொருததனபுததிசாலியுமறறவனபுததியீனனுமாயிருககக்காணகிறுர்களெனறும, இபபுததிசாலியெவவிததததிலாவதுசீவனமபணணுவானுதலால, இபபுததியீனனுககேயனனபானுதிகளுககுவேணடியசாமானகளதாஙகளகொடுபபிககததககதெனறுமவவர்சனுககுச்சூசனைபணணி

[1] தாக்ஷிணியம், முகமாட்டம். [2] தளம், சேனை.

[1] பிரதிஷ்டை, பெருமை. [2] சல்லாபிக்கிறது, சம்பாஷிக்கிறது. [3] சமூகம், சந்நிதானம். [4] உக்கிராணக்காரன், தினபண்டம் வைக்கிறவன்.

னுன்[5]. அதனாலவன் வருட்புத்தியினனுயிருக்கக்கண்டவொருவனுக்கேபச்சமையல்ச்சாமான்களெல்லாங் கொடுப்பித்து, அவனோடேசொன்னுனியிதைக்கொண்டுபோயெங்கேயாவது சமைத்துச்சாப்பிட்டு, பிற்பாடுநம்மிடத்துக்குவாவென்று; மற்றவனோடேசொன்னுனியின்றுமத்தியானத்துக்குமாத்திரஞ்சீவனத்துக்கெங்கேயாவதுசம்பாதித்துக்கொண்டு,பொழுதுசாயந்தமமிடத்துக்குத்திரும்பவாவென்று. அப்பாலச்சுயம்பாகம்[6] பெற்றுக்கொண்டவனங்குள்ளவோர்ாறுக்கக்கரையிலிருந்தவொருசத்திரத்திற்போய், அச்சாமான்களெல்லாமவ்விடத்திலவைத்துச்சமைத்துக்கொள்ளவெத்தனித்தான். ஆனாலவன்சமைத்துக்கொள்ளநெருப்புமுன்னமேகொண்டுபோகாமையினாலும், அவ்விடத்திலதுகிடையாமையாலும், அந்தறக்கரைமறுபடியுமந்தப்பட்டணத்துக்குப்போகவெத்தனித்தந்தவாற்றணடைவந்ததைப்பார்த்தபோது அதற்குள்ளேயதிலேபூர்ணப்பிர்வாகமவந்துகொண்டிருந்ததால, அதைத்தாண்டவவனுக்குநீஞ்சத்தெரியாமையாலங்கேயேதின்றுபசியோடேதவித்துக்கொண்டிருந்தான். அவனோடேகூடவேதொடர்ந்துபோன, சுயம்பாகம்பெறாத, புத்திசாலியாயிருக்கக்கண்ட, அந்தப்பிராமணனைக்கண்டு, நானுனக்குநெருப்புசம்பாதித்துக்கொடுப்பேன, நீசமைத்தவுடனெனக்குமுன்னதாகச்சாப்பாடிடுவையாவென்றவனைக்கேட்க; அவனதற்குச்சம்மதித்துவாக்குத்தத்தம்பண்ண; அதினபின்பந்தப்புத்திசாலியங்கேகிடந்தவிர்ண்டுகட்டைகளைபெடுத்துக்கொண்டொருமறைவானவிடத்திற்போய், அதுகளையொன்றோடொன்றுநன்றுத்தேய்த்ததினெருப்புண்டாக்கி, அதைக்கொண்டுவந்தப்புத்தியீனப்பிராமணனுக்குக்கொடுத்தான். அவனதினுற்சமைத்தபின்புதன்வாக்குத்தத்தப்படிப்புத்திசாலிக்குமுன்னதாகச்சாப்பாடிட்டான். அவனதைச்சீக்கிரத்திற்சாப்பிட்டவாற்றையுநீச்சலினுற்றாண்டிக்கொண்டவிராசாவின்சமுகத்திற்போய்நின்றுன். இவனீசாப்பிட்டையாவென்றவனைக்கேட்க; அவனுமென்ன; அதுனக்குக்கிடைத்தவயனமெப்படியென்றிவனவனைக்கேட்க; அந்தவயனத்தையெல்லாமவனிவனுக்குச்சொல்ல; அப்போதிவனவனுக்குநல்லவெகுமானம்பண்ணியவனையனுப்பிவிட்டு, தனமந்திரியினுடையபுத்திகூர்மைக்குச்சந்தோஷித்து, அனறுமுதற்றனத்தைப்பார்க்கிலும்புத்தியேபெரிதானதென்றுநிச்சயித்தான்.

௯௭-வது கதை.

ஒருநாள்சனகமகாராசாவினசபைக்குப்பிரம்மரிஷிகளிலமிகவும்பூசிதராயும்மகானுபாவராயும்[1]பரமக்கியானியாயுமிருக்கினறநாரதபகவானெழுந்தருளி, அந்தவர்சனலர்க்கியம்[2] பாதத்தியம்[3]ஆசமனம்[4] இதுகளாலநன்றுப்பூசிக்கப்பட்டு, அவனாற்றரப்பட்டவொருமேலானவாசனத்திலவீற்றிருந்தார்[5]. அவரையந்தச்சனகமகாராசாநோக்கி, மகாருஷியே, அடியேனவேதாந்தஞ்சித்தாநதமிந்தவிஷயங்களிலவிஸ்தாரஞ்சங்கைகளகேட்டுக்கொள்ளவிச்சித்திருக்கிறேன; ஆகையினாற்றேவரீரிங்கேயேசிலகாலமவசித்திருந்தடியேனமனக்குறையைநிறைவாக்கி, பின்புதேவரீருக்கிச்சையானவிடத்துக்கெழுந்தருளவேணுமென்றவர்காலிலேவிழுந்தவரைமிகவும்பிரார்த்தித்தான். அப்போதந்தமுனிவர்; ஓய்மகாபுண்ணியாத்மாவே, உங்களவங்கிசத்தொல்லாமகாக்கியானிகள, வர்ப்பிர்சாதிகள, விதேகர்கள்[6]; நீரும்ப்படிப்பட்டவரோயாகிலுமெனனிடத்திலேசிலசங்கைகளகேட்கவிரும்பினீர்; ஆனாலநானொருவூரிலொருநாளைக்குமேலிருக்கக்கூடாதென்றேனனிடத்தில மகாருஷிகளெல்லாருமவர்ம வாங்கிக்கொண்டிருக்கிறார்கள, ஆதலால நீர்கேட்டவர்மெனனாலநிறைவேறறப்படமாட்டாது; ஆனாலுமென்னுடையமாணாக்கர்களில்[7] ஒருத்தனை நீர்கேட்டசங்கைகளெல்லாந்தீர்க்கத்தக்கவனையுமமிடத்திற்கனுப்புவேன; அவனாலது

[5] ருசினை, சைகை. [6] சுயம்பாகம், ஒருவேளைபோசனத்துக்குவேண்டியசாமான்கள.

[1] மகானுபாவன, மிகவுஞ்சிறந்தவன. [2] அர்க்கியம, பூசாதிர்வியம. [3] பாத்தியம, கால்கழுவசலம. [4] ஆசமனம, ஒருசடங்கு. [5] வீற்றிருக்கிறது, சிறந்திருக்கிறது. [6] விதேகன, தேகமில்லாதவனபோலிருக்கிறவன. [7] மாணாக்கன், சீஷன்.

கள நிறைவேறுமென றுசொலலிபபோய்த்தமமுடையவாசிரமஞசேர்நது, அஙகுளளதமதுசிஷிர்களி லொருத்தனையநதச்சனகமகாரா சாவிடததுககுப்போகநியமித்தார். அவருடையநியமனப்படியவி டததுககுப்போகப்புறபபடடவசிஷினுககுச்சிலபுததிமதிகளவர்சொலலியனுபபினுர். அதுகளென்ன வெனறுல, நீயிராசாக்களிடததிற்சிலவருஷஙகளவசிககபபோகிறுய்; அவர்களிடததிலநீவைதீகசாநத சுனுயிருககவாவவர்களநடததையைநீகறறுககொளளவாகூடாது. பூர்வததிலோர்சனதன்னடததையி ஞற்சொர்ககததைபடைநதான, ஒருருஷிதன்னடததையினுலநரககததைபடைநதான்; அப்படியுனககும நேரிடாமலநீயஙகிருககுஙகாலமெலலாஞசாககிரதையாயிருநதுவாவெனறுர். அதற்கநதசசிஷின், அய யா, நான்தஙகளநியமனபபிரகாரமவிடததிறகுபபோகிறதறகுமுனனமேதேவரீரநதக்கதையையடியே னுககருளிசசெயய[8] வேணும், எனெனறுலிதுமிகவும்மாறுபாடாயிருககிறதெனறுன். ஆகையாலநாரத பகவானவனுக்கதைச்சொலலததொடஙகிஞர்; என்னவெனறுலோர்சன, தனினிளவயதிலர்சாட்சிபி லதிகசாககிரதையாய்நீதியோடுநடநதுகொணடவன், தனமுதுமையிலவேதாநதகாரியம் விசாரிககவிச சிதது, தனககுபதேசிககசசொலலியொருருஷியைவேணடிககொணடான். அவனுரணியததிலவ சிககிறவனநகரததிலவசிககமாடடேனென்ன; அவவர்சனுனுலெனககொருதோடடமெனபடடணததிற குவெளியிலேபததுநாழிகைவழியிலிருககிறது, அதிலோராசிரமஙகடடியுமககுததருவேன், அஙகேயே நீரிருநதாலநானேயுமமிடததுககுவநதுபதேசஙகேட்பேனென்ன; அதற்கவனசமமதித்தநதத்தோட டததிலவவர்சனகடடுவிததவொருபனனசாலையில[9] இருநதான். அவனிடததிவநதவர்சனபோய்த்தின மானஞசாஸதிரஙகளவாசிபபான்; அவவிடததிற்கிவவர்சன போனபோதிவனுடைய பரிடடணைகளில[10] சிலவிவனுடனகூடடபபோய்க்கொணடிருககும; அதுகளைககணடவமமுனிவனபபேர்ப்படடதுகளை முனகாணுதவனுகையாலதுகளிலதிசயிததவவர்சனறமனையைப்பார்க்கவிசசிததான்; அதுபார்த்தான பினபநநகரததிலேயேவசிககவிஷிடமாய், அவவர்சனுக்கஙகுளளவொருதோடடததில்த்தனககோராசிர மம்வனுறகடடுவிததுககொணடதிலவாசம்பணணிஞன். அபபாலப்படடணததுசசினனலகள[11] எலலாங கணடதிலதிலும்பிசசிததான்; இபபிரகாரமவனவிரக்தி[12] மனசுகெடடுபபோயிறறு, அவனவேஷததிலும வாசகததிலுமாததிரமவனுடையவைதீகம[13] நினறது. அவவர்சனுககோநாள்தோறுமவன்படிததசாஸ திரபபிரகாரமும்முனிவனதனககாகநடநதபிரகாரமுமவனிறககததொடஙகினதினுலும, அவனமுனன மேசகலபாககியஙகளுமனுபவிததிருநதபடியினுலும, இவவுலகவாழ்வினமிகவுமவெறுததுமுற்றததுறந தவனுயேயிருநதான். கடைசியிலவவர்சனநதியகாலததிலொருநிசமானருஷிபோன றவிரக்தியினுல மோக்ஷத்தைபடைநதான்; அமமுனிவனதனமாயாவேதாநதிததனததினுலிராசாககளபோலச் சகலப தார்த்தஙகளபேரிலுமிசசைவைததிருநதபடியினுல, அவனநதியததிலேநரகததுககுபபோனுன். ஆகை யானீயுமபபடிசெயயாமல நன்மையாய்வர்ககடவாயென்றுசிர்வாதமபணணியநதருஷியைச் சனகமகா ராசன சபைககனுபபிஞர்.

௬அ௰௩. கதை.

ஒருசெவிட்டிடையனொருபிலலாமொய்ச்சி[1] வெளியிலநாளதோறுமவாடிககையாய்த்தனனுடை மேய்த்துககொணடிருபபான்; அதினருகேயொருவொடடிவீடடுசசெவிட்டுபபடியாள[2] புலலறுத துககொணடிருபபான். இபபடியிருககையிலொருநாளசசெவிடடிடையனுககோர்வசர்மானவேலைநேரி டடு, அதறகுததானபோய்த்திருமபிவருமளவுமவவாடடைமடககிககொணடிருகக[3] தனககுவேறொரு

[8] அருளிச்செயயிறது, கிருபைபணணுகிறது. [9] பனனசாலை, தழையாற்கட்டினவீடு. [10] பரிடடணை, பரிவாரம. [11] சினனல, வேடிககை. [12] விரக்தி, துறவு. [13] வைதீகம, வேதமார்க்கம.

[1] பிலலமொய்சசி, பிலலுநிறைநதவிடம. [2] படியாள், கூலியாள். [3] மடககிககொணடிருககிறது, காததுககொணடிருககிறது.

சகாயமில்லாததினாலே, எப்படியென்றவன் தன்களுளே யோசனைபண்ணிக்கொண்டு தன்னைச்சுற்றிலும் பார்க்கையில், அக்கழனிவரப்பில்[4] புல்லறுத்துக்கொண்டிருந்த வப்படியாளைக்கண்டு, அடே, அண்ணேன் அண்ணேன், என்றிவனைக்குறித்துப்பத்துக்குரலுக்கக்கூப்பிட்டான். அவனுங்கூவினதினவனதிலே சிறுசையாய்க்கேட்டிவன்றன்குப்பின்னே திரும்பிப்பார்த்தான். இவனைக்குறித்தச்செவிட்டிடையன் நானகொஞ்சம்வேலையாய்ப்போதென்வீட்டுக்குப்போகவேண்டியிருக்கிறபடியால், நான்திரும்பிவரும்வரையிலிவ்வாடுகளைமடக்கிவைத்திருப்பையாகில், நான் திரும்பிவந்தவுடனேயொருகிடாக்குட்டியுனக்குத்தருவேனென்றுசொன்னான். ஆனாலந்தச்செவிட்டாளுக்குக்கேட்டதில்லை, அவனபழம்படிதன் வேலையாகிபுல்லறுத்தலைச்செய்துகொண்டிருந்தான். அவ்விடையன்தன்னுடையவனமடக்கியிருக்கச்சம்மதித்தானென்றெண்ணிக்கொண்டு, தன்னவசர்வேலைக்குப்போய்த்தீர்ந்தவுடனேயவ்வாட்டுமந்தைக்குத்திரும்பிவந்தான். அப்போதுதானவிட்டுப்போனவாடுகளசிதறுமலோரிடத்திலதானேமேய்ந்துகொண்டிருந்ததைப்பார்த்து, இந்தப்படியாளந்தம்முடையவாட்டைப்பத்திரமாய்நாம்சொன்னபடிகாப்பாற்றிக்கொடுத்தானதலால், இவனுக்குநாம்முன்னேசொன்னபடிக்கொருகிடாய்க்குட்டிகொடுக்கவேணுமென்று, அவனுக்காகவொன்றைப்பிடித்துக்கொண்டவனிடத்துக்கதைக்கொண்டுவந்து, அதையவனுக்குக்காட்டியிதையுன்பாட்டுக்காகவெடுத்துக்கொள்ளென்றதையவனெதிரேவிட்டான். அந்தச்செவிட்டாளிவனிந்தவாட்டுக்குட்டியைத்தூக்கிக்கொண்டெங்கேயோவமிஞ்சி[5] வேலைக்குநம்மைப்போகச்சொல்லுகிறானென்றெண்ணிக்கொண்டு, எனக்கொட்டியார்வீட்டுவேலைமெத்தவிருக்கிறது, நான்கூசாகட்டுப்புல்லறுக்கவேண்டியிருக்கிறது, என்னாலேயிதுசெய்யமாளாதுபோவென்றான். அச்செவிட்டிடையனிப்படியாளதன்கஷ்டத்துக்காக[6] ஒருபெரியவாடுகேட்கிறானென்றெண்ணிக்கொண்டு; நானுநாழிகைதானேயென்னாடுகளைநீபார்த்திருந்தாய், அதற்குக்காலரூபாய்பெறுமானவொருவாட்டுக்குட்டியுனக்குக்கொடுத்தாலநீயதுபோதாதென்றொருபெரியவாடுகேட்கிறாய், என்னடா நீ பேராசைக்காரனா[7] ஆயிருக்கிறாய், இந்தநியாயத்தையாரிடத்திலாவதுசொல்லிக்கொள்வோமவாவென்றவனையிழுத்தான். அச்செவிட்டுப்படியாள நீயமிஞ்சிவேலைக்கிழுத்தால நானவருவேனோ, உன்னாயத்தையொருவருடனே சொல்லுவோமவாவென்று, அவ்விருவருமாயவிடம்விட்டுப்பாறபோகையில், ஒருசத்திரத்தண்டையிலொருதிண்ணையில்த்தனபெண்சாதியுடனேபிணங்கி[8]வந்துபடுத்துக்கொண்டிருந்தவொருசெவிட்டுவேர்த்தகனைத்தட்டியெழுப்பி, தங்களகாரியத்தையவனோடுசொன்னார்கள். அவ்வர்த்தகனதனபெண்சாதிதன்னோடேசமாதானத்துக்கிவர்களையனுப்பினானென்று, இனிமேலந்தத்துர்ச்சனிமுகத்தில நானமிழிக்கமாட்டேனென்றான். இப்படிமுச்செவிடருமொருவனகருத்தொருவனறியாமலவழக்குப்பட்டிருப்பதை, அந்தச்சத்திரத்திலவந்தகாதுகேட்தகவொருவிவேகியறிந்து, முன்னேயவ்விடையனையுன்சங்கதியென்னவென்றான். அவ்விடையனதுகளையெல்லாமவனுக்குச்சொல்லி, இந்தக்கிடாக்குட்டிதத்தனிவனுக்குநானகொடுப்பேன, பெரியாடுகொடுக்கமாட்டேனென்றான்; அதற்குமேலவனந்தச்செவிட்டிடையனைப்பார்த்துநானிந்தக்குட்டியையந்தப்படியாளுக்குக்கொடுத்துச்சமாதானம்பண்ணிப்போடுகிறேனநீபோவென்றவனையனுப்பிவிட்டு; அப்பாலந்தப்படியாளையுன்சங்கதியென்னவென்றான். அதற்கவனெனக்கொட்டியார்வீட்டுவேலைமெத்தவிருக்கிறது, அதைவிட்டுவிட்டவனுக்கமிஞ்சிவேலைசெய்யமாட்டேனென்றான். அதற்கவனுன்னைநீபோவென்றவனையுமனுப்பிவிட்டு, பின்பந்தப்பிணக்கனையுன்சேதியென்னவென்றான். அப்பொழுதவன் நானினிமேலந்தக்கெட்டமனுஷியைக்கண்ணாலேபார்க்கமாட்டேன், பர்தேசம்போகிறேனென்றான். அதற்குமவனப்படியேசெய்யென்றவனையுமனுப்பிவிட்டு, அந்தவாட்டுக்குட்டியைத்தானெடுத்துக்கொண்டுதனவீடுபோய்ச்சேர்ந்தான்.

[4] வரப்பு, அணை. [5] அமிஞ்சி, கட்டாயம். [6] கஷ்டம், வருத்தம். [7] பேராசைக்காரன், அதிலோபசைக்காரன். [8] பிணங்குகிறது, கோபிக்கிறது.

௰௩-வது. கதை.

